விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஆவணி 29 சனி (14-9-68) ஐ: ஆகி: 20 புத்தகம் 22 இதழ் 49

மில்க்வைற்
நீலசோப், பார்சோப்
சிரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்



## தமிழ் காங்கிரஸ் மா. சபை மசோதாவை எதிர்த்தது ஏன்?

## அமரருக்கு அஞ்சலி செய்வோம்!



தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு பிரதேச மத வேறுபாடுகளில் சிக்குண்டு நிலைதடுமாறி நின்ற ஈழத் தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி இன, மொழியுணர்வூட்டி, அவர்களது உள்ளங்களில் சுதந்திர உணர்ச்சி கொழுந்துவிட்டெரியச் செய்து, இன உரிமைப் போராட்டங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு, அதிலே தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த தியாக மாமலை, கோப்பாய்க் கோமான் அமரர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள். தோற்றம்: 13.10.1911 மறைவு: 17.9.1959.

## அந்தரங்க நோக்கம் அம்பலம்!

மாவட்ட சபை மசோதாவை முறியடிப்பதில் தமிழ் காங்கிரஸ் அளவுகடந்த ஆர்வம் காட்டி வந்த தன் உள்ளாந்தர நோக்கம் என்ன என்பதை அம்பலப்படுத்தும் நிலையில் சுதந்திரன் இன்று இருக்கிறது. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமே கொழும்பில் சட்டத் தொழில் புரியும் தமது நெருங்கிய நண்பர் ஒருவரிடம் மிக அந்தரங்கமாக அத்தகவலை கூறியதாக அறியப்படுகிறது.

மாவட்ட சபை மசோதாவை எதிர்த்ததற்கு தமிழ் காங்கிரஸ் தலைவர் அந்தரங்கமாகக் கூறியதாகச் சொல்லப்படும் காரணம் இதுதான்:

"மாவட்ட சபைகள் மசோதாவை நாம் எதிர்த்ததற்கு காரணம் உண்மையிலேயே அதனால் தமிழ் மக்களுக்கு தீமையேற்படும் என்பதனாலல்ல. தமிழரசுக் கட்சியின் விருப்பப்படி மாவட்ட சபை மசோதா நிறைவேற்றப்பட்டு தமிழ் பகுதிகளில் மாவட்ட சபைகள் இயங்கத் தொடங்கிவிட்டால், தமிழ் காங்கிரசுக்கு பின்னர் தமிழ்ப் பிரதேசங்களில் ஒரு வாக்குக்கூட கிடைக்காது போய்விடும். அதன்பின்னர் தமிழ் காங்கிரஸ் அழிந்துவிடவேண்டியதுதான். மாவட்டசபை மசோதாவை தமிழ் காங்கிரஸ் ஆதரிப்பது, அது தனக்குத் தானே சாவை அணைத்துக்கொள்வதாக முடியும். எனவே தமிழ் காங்கிரஸ் கட்சி அழிந்துவிடாமல் காப்பாற்றவே மாவட்ட சபைகள் மசோதாவை எதிர்த்தோம்."

திரு. பொன்னம்பலம், தம்மிடம் இதை அந்தரங்கமாக கூறியதாக குறித்த வழக்கறிஞர் சட்டக் கல்லூரி மாணவர் ஒருவரிடம் சட்ட நூல் நிலையத்தில் வைத்து காதோடு காதாக வெளியிட்டாராம்.

## ம. பொ. சி. இலங்கை வரமாட்டார்!

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கைக்கு வரப்போவதில்லை. இத்தகவலை சென்னையிலிருந்து நமது நிருபர் அறிவித்துள்ளார்.

தமிழரசுக் கழக பிரமுகர் ஒருவருடன் தொடர்புகொண்ட பின்பே நமது சென்னை நிருபர் இத்தகவலை தெரிவித்துள்ளார். குறித்த தமிழரசுக் கழகப் பிரமுகர் நமது சென்னை நிருபரிடம் தெரிவித்ததாவது:-

"ம. பொ. சி. அவர்கள் இலங்கையிலுள்ள தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணியின் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை செல்லப் போவதில்லை. வெளிநாட்டிலுள்ள எந்த அரசியல் கட்சி மேடைகளிலும் நேரடியாக கலந்துகொண்டு பேசுவதற்கும ம.பொ.சி. அவர்கள் ஒருப்படமாட்டார்.

"அத்துடன், இலங்கையிலுள்ள அரசியல் நிலைமைகளை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக உன்னிப்பாக அவதானித்து கணித்து வைத்திருக்கும் ம. பொ. சி. அவர்கள் இலங்கை தமிழ்

(7-ம் பக்கம் பார்க்க)

கார்டூன்
4-ம் பக்கம்

## வவுனியா எம். பீயால் பொறுக்கமுடியவில்லை!

தமிழினத்தின் உரிமைகளை விலைகூறி விற்பதிலும், தமிழுரிமைக்கு உழைத்து வரும் தமிழரசுக்கட்சியின் முதுகில் குத்துவதிலும், தமது தலைவருக்கு தாம் சிறிதும் சளைத்தவரல்ர் என்பதை கடந்தவாரம் பாராளுமன்றத்தில் காட்டிவிட்டார் வவுனியா எம். பீ. சிவசிதம்பரம்!

தமிழ்ப் பிரதேசங்களில் தனிச்சிங்களச் சட்டம் செயலிழந்துவிட்டதாக திருமலையில் திரு. அமிர்தலிங்கம் எம்.பீ. பேசியதாக கூறப்படும் பேச்சு ஒன்று இம்மாதம் 9-ம் திகதி 'சன்' ஆங்கில ஏட்டில் முன்பக்கத்தில் வெளியாகியிருந்தது. இப் பேச்சு வெளியாகிய 'சன்' பத்திரிகையை திரு. சிவசிதம்பரம், கல்வியமைச்சர் திரு. இரியகொல்லைக்கு சுட்டிக்காட்டினர்.

ஆனல் திரு. இரியகொல்லை அலட்சியத்துடன் தமது வேலையில் கவனமாக இருந்தார். இச் சம்பவம் இம் மாதம் 10-ம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதைக்கவனித்துக் கொண்டிருந்தவர்கள், 'அன்று கட்டபொம்மனை எட்டப்பன் காட்டிக் கொடுத்ததுபோல இன்று தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் காட்டிக்கொடுத்து வருகிறார்கள். தீதும் நன்றும் பிறர்தரவாரா என்று புறநானூற்றுப் புலவன் பாடியது எவ்வளவு மிகப் பெரிய உண்மையென்று தமக்குள் பேசிக்கொண்டனர்.

## இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள ஜீ. ஜீ. க்கு



# போடாத தபால்

# வட்டமேசை தோல்வியுற்றால் அடுத்த நடவடிக்கை யென்ன?

ஒரு பொய்யை திரும்பத் திரும்ப ஒன்பது தரம் சொன்னால், அது உண்மையாகி விடும் என்பது கோணிப் புழுகன் கோயபல்ஸ் கையாண்ட தந்திரம்.

எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் இடித்துக் காட்டினாலும், கோயபல்ஸிடம் கற்றுக் கொண்ட அப்பாடத்தை விடமாட்டேன் என்கிறீர்களே!

அது சரி, அதை விட்டால் வேறு நீங்கள் எதைத்தான் கூறுவதற்கு இருக்கிறது?

மட்டக்களப்புக்கு அண்மையில் சென்று பல பொய்களை கூறிவிட்டு திரும்பியிருக்கிறீர்கள்.

ஆனால், மீன்பாடும் தேன் நாட்டு மக்கள் உங்கள் பொய்களைக் கேட்டு பரிதாபத்துடன் உங்களைப்பார்த்திருப்பார்களே தவிர நம்பியிருக்க மாட்டார்கள்.

**உங்களது 'பொற்காலத்திலேயே' மட்டுநகர் மண்ணை நீங்கள் மிதித்து விடாதபடி ஓட ஓட விரட்டிய மறவர் குலதிலகங்களல்லவா மட்டுநகர் மக்கள்!**

மட்டுநகர் மக்களை அரசியலில் யாரும் ஏமாற்றி விட முடியாது. உங்கள் குத்துக்கரணங்கள், செப்படி வித்தைகள் யாவும் அவர்களுக்கு தலைகீழ்ப்பாடம்!

பிரேதேச வேறுபாடுகளுக்கு இடமில்லாமல் நடந்து கொள்ளும்படி மட்டுநகரில் கடமையாற்றும் யாழ்ப்பாண அதிகாரிகளுக்கு அறிவுரை கூறினீர்களாம்.

அந்த அளவுக்கு உங்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருப்பது உண்மையானால் மகிழ்ச்சிக்குரியதே!

யாழ்ப்பாணத்தார், மட்டக்களப்பார் என்ற பிரதேச வேறுபாட்டின் மூலகர்த்தாக்கள் உங்கள் கட்சியினர் தானே!

இனிமேலாவது பிரதேச வேறுபாட்டைக் கிளப்பாமலிருப்பீர்களென்று எதிர்பார்க்கலாமா?

**ஆனால் முதலில் அந்த புத்திமதியை யாழகற்றிச்சங்கத்தின் தலைவரும் உங்கள் தற்காலிகச் சிடருமான வவுனியா சிவசிதம்பரத்துக்கு எடுத்துக் கூறுங்கள்.**

**யாழகற்றிச் சங்கத்தை உடனே கலைத்து விடும்படி அவருக்கு உத்தரவிடுங்கள்.**

உங்கள் உத்தரவுக்குஅவர் கட்டுப்படுகிறாரா என்று பார்ப்போம்!

பாட்டாளிபுரத்தில் நின்று கொண்டு மீண்டும் தமிழர் ஒற்றுமை பேசியிருக்கிறீர்கள். யாராவது ஒற்றுமைக்கு மாறாக இருக்கிறார்களா? உங்களைத்தவிர?

நீங்கள் ஒற்றுமைக்குத் தயாரென்றும் தமிழரசுக் கட்சி தான் அதற்கு மாறாக இருப்பதாகவும் யாருக்கு விடுகை விடப் பார்க்கிறீர்கள்?

ஒவ்வொரு பொதுத் தேர்தல் நெருங்கும் போதும் ஐக்கிய முன்னணி, ஒற்றுமை, வட்டமேசை போன்ற மொட்டை ஆயுதங்களை கைகளில் எடுத்துவிடுகிறீர்கள். ஒற்றுமை அவசியம் தான். ஆனால் யார் ஒற்றுமைப்படவேண்டும்? தலைவர்களா? மக்களா?

தமிழ் பேசும் மக்களிடையே ஓரளவு ஒற்றுமை 1956க்கு பின்னர் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒற்றுமையை குலைத்துவிடுவதற்குதானே கடந்த 12ஆண்டுகளாக செயற்பட்டுவருகிறீர்கள்?

ஒற்றுமை ஒரு கொள்கையின் அடிப்படையில்—இலட்சியத்தின் அடிப்படையில் ஏற்படவேண்டும்!

அந்த ஒற்றுமை இன்று தமிழரசுக்கட்சியால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்று ஒற்றுமை பேசும் நீங்கள் மனசார ஒற்றுமையை விரும்பியிருந்தால்—அதை செயலில் காட்ட நேர்ந்த சந்தர்ப்பங்களில் காட்டியிருக்கலாமே!

மாவட்டசபை மசோதாவை இந்நாட்டுப் பெரும்பான்மைத் தமிழ் பேசும் மக்கள் மிக விரும்பியது உங்களுக்குத் தெரியும். ஆகவே நீங்கள் மனசார ஒற்றுமையை நாடியிருந்தால், மாவட்டசபை மசோதாவை ஆதரித்திருக்க வேண்டாமா?

மாறாக எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு மாவட்டசபை மசோதாவை முறியடிப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு நின்றீர்கள்.

பாராளுமன்றத்தில் மா. சபை வெள்ளையறிக்கை விவாதத்தின் போது, தமிழரசுத் தலைவர்களையும் கட்சியையும் மிகவும் கேவலமாக திட்டித்தீர்த்ததன் மூலம்—தமிழ்மக்களிடையே பிளவு ஏற்பட்டிருப்பதாக அகில உலகமும் அறியும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினீர்கள்.

ஒரு கட்டத்தில், இந்த நாட்டுத்தமிழ் பேசும் மக்கள் தங்கள் உயிரனைய தலைவர் என்று கருதும் முதுபெரும் தலைவரான தமிழரசுத் தந்தையை காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகவையும் துணைக்கு அழைத்துவைத்துக்கொண்டு ''பட்டினிப் பார்வையும் மெலிந்த தோற்றமும் உடையவர்'' என்று வர்ணித்துக் காட்டினீர்கள்.

இவையெல்லாம்தான் ஒற்றுமைக்கான அடிக்கற்களா?

பல்கலைக்கழகப் பிரச்சினையில் என்ன செய்கிறீர்கள்? 1956 முதல் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு தமிழறிஞர்களும் தமிழரசுக்கட்சியும் முயற்சிசெய்துவரும்போது காலஞ்சென்ற சு. நடேசனிடமிருந்து இந்துப்பல்கலைக்கழகத்தையும் கடன் வாங்கிக்கொண்டு இடையிலே புகுந்து குட்டை குழப்புகிறீர்களே! இதுதான் ஒற்றுமைக்கு அத்திவாரமா?

ஒற்றுமை விரும்பும் நீங்கள் இந்துப்பல்கலைக்கழகம் என்று கூறிக்கொண்டு, தமிழ் பேசும் மக்களை மத ரீதியில் பிளவுபடுத்த முயற்சிப்பதேன்?

தமிழ் பேசும் மக்களைப் பிளவுபடுத்த முனையும் உங்களுடன்—உங்கள் கட்சியுடன் தமிழரசுக்கட்சி உறவேற்படுத்துவது நடக்கக் கூடிய காரியமா!

நீங்கள் உண்மையிலேயே ஒற்றுமையை விரும்பினால் ஒன்று செய்து விடுங்களேன்!

பேசாமல் உங்கள் குட்டிக் கட்சிக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து விடுங்கள்.

**“எஸ்ஸாறெம்.”**

அது ஒன்றுதானே ஐக்கியத்துக்கு வழி! உங்களுக்குத் தான் சொந்தமாக கொள்கை இலட்சியம் எதுவுமே கிடையாதே!

கொஞ்சக்காலமாக வட்டமேசையை கீழே வைத்துவிட்டிருந்த நீங்கள் மீண்டும் இப்போது அதை தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

## வட்டமேசை முன்னால் இருந்ததும், சிங்கள வெறியர் மனம் மாறிவிடுவரா?

## தமிழர் ஒற்றுமையை கெடுப்பது யார்?

உங்கள் 'வட்டமேசையை இந்நாட்டிலுள்ள வேறு எந்த அரசியற்கட்சியும் வாங்குவதற்கு தயாராக இல்லையே!

சிங்கள மக்களின் அரசியற்கட்சிகள் எவையென்றாலும் சரி வட்டமேசைக்கு ஆதரவு தெரிவித்ததுண்டா?

ஆரம்பத்தில் வட்டமேசைக் கருத்தை ஆதரித்த ஐ. தே. கட்சி கூட அத்திட்டம் ஒரு போதுமே நிறைவேறாது என்பதை உணர்ந்து கைவிட்டுவிட்டதே!

ஐ. தே. கட்சி, சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட்கட்சி, ஆர். ஜி. யின் கட்சி—எந்தக் கட்சி வட்டமேசைக்கு தயாராயிருக்கிறது? எதுவுமில்லையே!

தமிழ் [illegible] [illegible] மொழிப் பிரமாணங்களைக் கூட நிறைவேற்றக்கூடாதென்று 1966ம் ஆண்டு வெறிக் கூத்தாடிய கூட்டுக் கட்சிகள் வட்டமேசைக்கு முன்னால் வந்திருந்ததும், அவற்றை ஏற்றுக்கொண்டு விடுமா? சம அந்தஸ்து தர இணங்கிவிடுமா?

தங்கள் எண்ணத்தில் உதித்து வளர்ந்த — தாங்களே தர ஒப்புக்கொண்ட மாவட்டசபையை தேசிய ஆட்சிகொண்டுவருவதை எதிர்த்து தமிழ்த்துவேஷப் பிரசாரம் நடத்திய கூட்டுக் கட்சிகள் வட்டமேசையின் முன் உட்கார்ந்ததும் அதை ஏற்றுக்கொண்டுவிடுமா?

கூட்டுக் கட்சிகள் ஏன்? வட்டமேசைக்கு முன் உட்கார்ந்ததும், நீங்கள் தான் திடுதிப்பென்று மாவட்டசபை ஆதரவாளராக மாறிவிடுவீர்களா?

வட்டமேசை, வட்டமேசை, என்று தேர்தல் காலங்களில் கூச்சலிடுகிறீர்களேதவிர, வட்டமேசையில் உங்களுக்கு உண்மையான நம்பிக்கையிருந்தால், அதைக்கூட்ட ஏன் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை?

சரி, உங்கள் ஆசைப்படி எல்லாக்கட்சிகளும் வட்டமேசைக்கு சம்மதித்து ஓர் வட்டமேசை மாநாடு நடப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்!

**அந்த வட்டமேசை மாநாடு தோல்வியடைந்தால்...? அடுத்த நடவடிக்கை என்ன?**

**அடுத்த நடவடிக்கை, இலங்கையைப் பிரித்து ஒரு தனித்தமிழ்நாடு அமைப்பதற்கு போராடுவதாகவேயிருக்கமுடியும்.**

அந்த நடவடிக்கைக்கு நீங்கள் தயாரா? தமிழ் மக்களை தயார்படுத்திவிட்டீர்களா?

இவற்றையெல்லாம் சிந்திக்காமல் வெறுமனே வட்டமேசை வட்டமேசை என்று மந்திரம் ஓதியாருக்கு என்ன நன்மை?

நான் மந்திரியாக இருந்த போது 3 தொழிற்சாலைகளை நிறுவினேன் என்று அண்மைக் காலமாகப் பெருமையடிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள்!

அதிலும் கூட ஒரு பொய்யா? காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை நீங்கள் மந்திரிப் பதவி ஏற்ற நேரத்தில் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. அது எப்படி உங்கள் முயற்சியால் வந்தது என்று கூறுவீர்கள்?

மற்ற இரு தொழிற்சாலைகளும், பரந்தன் இராசயனத் தொழிற்சாலையும், வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையும் உங்கள் காலத்தில்தான் கிடைத்தது—ஒப்புக் கொள்ளுகிறேன்!

ஆனால் அவற்றைப் பெற நீங்கள் கொடுத்த விலையென்ன?

**10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமையை விலை பேசினீர்கள். மலைநாட்டிலிருந்து வந்த 8 தமிழ்ப்பாராளுமன்றப் பிரதிநிதிகளை பறித்தெடுக்கும் சட்டத்தை ஆதரித்தீர்கள். தமிழ்ப் பிரதேசம் சிங்களக் குடியேற்றத்தால் பறிபோவதைக் கண்டும் மௌனம் சாதித்தீர்கள்!**

**உங்களைப் போல தமிழுரிமைகளை விட்டுக் கொடுக்க தமிழரசுக்கட்சியும் சம்மதித்திருந்தால்—தமிழர்களின் முதுகில் குத்த உதவியிருந்தால்—மூன்றல்ல— முப்பது தொழிற்சாலைகளை வடக்கு கிழக்கில் நிறுவியிருக்கும்.**

ஆனால் கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கும் கபோதித்தனம் தமிழரசுக் கட்சியிடம் இல்லையே!

சில காலமாக மறந்துவிட்டிருந்த பழைய பொய் ஒன்றை மட்டக்களப்பில் மீண்டும் நினைவுபடுத்திப் பார்த்திருக்கிறீர்கள்!

1949-ம் ஆண்டின் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை நேருஜியும் ஆதரித்ததாகவும், தமிழரசுக் கட்சியும் ஆதரித்திருந்தால், 6 லட்சம் மலைநாட்டுத் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை கிடைத்திருக்கும் என்றும் கூறியுள்ளீர்கள்.

இது முழுப் பொய் அல்லவா?

அச்சட்டத்தை நீங்கள் ஆதரித்த துரோகத்தை மறைக்க ஆசிய ஜோதியின் பெயருக்கும் ஏன் மாசு கற்பிக்கிறீர்கள்?

**1948--ம் ஆண்டு அச்சட்டத்தை எதிர்த்து டி. எஸ். சேனநாயகாவுக்கு ஜவகர்லால் நேரு தந்தி அனுப்பியதை உங்களால்மறுக்க முடியுமா!**

**அச்சட்டத்தின்படி சுமார் 50,000 பேருக்கு மட்டுமே இலங்கைப் பிரஜாவுரிமை கிடைக்கும் என்று பெரிய சேனநாயகாகண்டியசிங்களத்தலைவர்களுக்கு வாக்களித்திருந்ததைப் பற்றி நீங்கள் சொல்லப்போவதுஎன்ன?**

இந்நிலையில் 6 இலட்சம் பேருக்கு வாக்குரிமை கிடைத்திருக்கும் என்று பச்சைப் பொய்யை எப்படி துணிந்து கூறுகிறீர்கள்?

அந்தச் சட்டத்தால் 10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்கள் குடியுரிமை இழந்தனர். அதன் பலனாக 1947-ம் ஆண்டுத் தேர்தலில் 8 பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து பாராளுமன்றத்துக்கு அனுப்பிய மலையகத் தமிழர்கள் 1952 தேர்தலிலே ஒருவரைக்கூட தேர்ந்தெடுத்தனுப்ப முடியாமற் போய்விட்டது.

அதைவிட படுதுரோகமான சட்டம் வேறுண்டா? அச்சட்டத்தைஆதரித்ததை விட படுதுரோகம் வேறு என்ன இருக்கமுடியும்?

இதுமட்டுமா? அந்தச் சட்டத்தை மலைநாட்டுத் தமி

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




எஸ். சாபி,
கஹத்வத.

கே: முஸ்லிம்களின் தலைவன் என்று தம்பட்டம் அடித்து திரியும் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதுக்கும், முஸ்லிம் தலைவர் தொழில் அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதுவுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: அதுதான் நீங்களே கூறிவிட்டீர்களே ஒருவர் முஸ்லிம்களின் தலைவர் என்றும், மற்றவர் தலைவர் என்று தம்பட்டமடிப்பதாகவும்! வேறு சொல்ல என்ன இருக்கிறது?

ஃ

சு. த. சிவராஜா,
கைதடி வடக்கு.

கே: பொன்னரும் அவரது இரு குட்டிகளும் பாராளுமன்றத்தில் சகல மசோதாக்களையும்சட்டங்களையும் ஆதரித்துவிட்டு வடமாகாண கூட்ட மேடையில் அந்த மசோதா கூடாது இந்த மசோதா நல்லதென்று பத்தினி வேடம் போடுவது ஏன்?

ப: பத்தினிவேடம் போட்டாவது தமிழ் மக்களின் இழந்த காதலைப் புதுப்பித்துவிடலாமோ என்ற நப்பாசையால்தான்!

ஃ

ஐ. சிவநாதன்,
நெல்லியடி.

கே: திருச்செல்வம் மீது என். எம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது ஏன்?

ப:வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிக குடி நீர்த் திட்டங்களை ஆரம்பிக்கிறார் என்ற குற்றச்சாட்டின்கீழ்.

ஃ

ம. ஸ்ரீகந்தராஜ்,
அல்வாய் வடக்கு.

கே: பாராளுமன்றத்தில் ஜீ. ஜீ.யைப் புகழ்ந்து ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர்பேசியதன்நோக்கம் என்னவோ?

ப: தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்கு (தமிழரசுக்கு) சகுனப் பிழையாக வேண்டுமென்றுதான்!

ஃ

சந்தனப் பொட்டு,
தாவடி.

கே: தமிழ் காங்கிரஸ் தலைவர் அவர்கள் தம்பட்டம் அடிக்கிறார், இலங்கை சுதந்திரம் அடைந்தபோது முதன்முதல் இலங்கையில் சிங்களக் கொடியுடன் தமிழர் கொடியான நந்திக் கொடியையும் ஏற்றிவைத்ததாக. தற்பொழுது அந்த நந்திக்கொடி எங்கே? இதைப் பற்றி ஏதாவது ஒரு கேள்வியை பாராளுமன்றத்தில் கேட்டாரரா?

ப: நந்தியை சிங்கத்தின் வயிற்றுக்குள் இரையாக்கியவரே அதைப் பற்றி கேட்பாரா? அதுசரி, தமிழனுக்கு தனிக்கொடி வேணுமென்ற ஆசை ஜீ, ஜீ.க்கு இருந்தால் எதற்காக சமஷ்டிக் கோரிக்கையை எதிர்க்கிறார்?

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: உலகில் உயர்நாடு யாது?

ப: திபேத். அதுதான் உலகிலே 'உயர்ந்த' நாடு.

ஃ

சி. அழகர்சாமி,
பிளாணிவத்தை.

கே: நான் ஒரு மாணவன். அரசியலில் எனக்கு மிகுந்த ஆவல்!

ப: அரசியல் செய்திகளை நிறைய படியுங்கள். ஆனால் தீவிரமாக அரசியலில் குதிக்காதீர்கள். படிப்பு முடிந்து அரசியலில் ஈடுபடலாம்.

கே: நான் சுதந்திரனை வாங்கி படிக்கிறேன் ஆனால் அப்பத்திரிகையிலுள்ள பற்று வேறு எந்த பத்திரிகையிலுமில்லை. காரணம் என்ன?

ப: அதைச்சொல்ல எனது தன்னடக்கம் தடுக்கிறதே!

ஃ

ப. சற்குணநாதன்,
கண்டி.

கே: ஆர்.ஜி.க்கும்,ஜீ.ஜீ.க்கும் பொருத்தம் ஏதும் உண்டா?

ப: தமிழரசுக்கட்சிஎதைச் செய்ய முயன்றாலும் எதிர்த்து கெடுத்துவிடுகிறார்கள் இருவரும்! அந்தவகையில் இருவரும் 'பொருத்தமானவர்களே.' ஆனால் ஆர். ஜி. யோ சிங்கள இனத்தைக் காட்டிக்கொடுக்க ஒருப்படார். மற்றவரோ தமிழ் இனத்தை தாரை வார்ப்பதற்கு தயங்கமாட்டார். இதுதான் வேற்றுமை!

ஃ

நாராயணமூர்த்தி,
யாழ்ப்பாணம்.

கே: பெண்களின் உடைகள் மேலே மேலே வளர்கிறதே அதைத் தடைசெய்வதற்கு உங்கள் நோக்கம் என்ன?

ப: அதைத் தடை செய்வதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது — அப்படி உடை உடுத்தும் பெண்களை எந்த ஆணும் ஏறெடுத்தும் பார்க்க மறுத்துவிடவேண்டும். இதற்கு ஆண்கள் தயாரா?

ஃ

ந. லீட்சுமிகாந்தன்,
தாவடி.

கே: இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 10-வது தேசிய மாநாடுஎப்பொழுது எவ்விடத்தில் நடக்கும்?

ப: அதை இம்மாதம் 14-ம் திகதி கூடும் தமிழரசுப் பொதுச்சபை முடிவு செய்யும்!

ஃ

எ. ருஜ்,
அ. புரம்,

கே: இந்தத் தமிழரசுக் கட்சிக்காரர்கள் பல்கலைக் கழகத்தை கிழக்கு மாகாணத்திலல்லவா நிறுவப் பார்க்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நிறுவினாலென்ன என்று கிழக்கு, வடக்கு பாகுபாடு காட்டி அன்று பேசிய தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி.யும் அவர் சகாக்களும் இன்று கிழக்கு மாகாணத்தை நாடுவது ஏனோ?

ப: 1970-ல் அடுத்த பொதுத்தேர்தல் வருகிறதல்லவா?—அதற்காக இப்போதே வலை வீசிப் பார்க்கிறார்கள்! அவ்வளவுதான்!

கே: தமிழகத்து சபாநாயகர் ஆதித்தனார் நடந்து கொண்டவிதம் பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கே முரண்பட்டது என்று கூறும் எம்நாட்டு பத்திரிகைகள் சமீபத்தில் கிழக்கு மாகாணத்தில் நம்நாட்டு பாராளுமன்ற உபசபாநாயகர் பேசிய கூறப்படும் பேச்சு, நடந்துகொண்ட விதம்பற்றி கருத்துக் கூறுமல் மௌனம் சாதிப்பது பற்றி என்னநினைக்கிறீர்கள்?

ப: உள்ளூர் விவகாரம் பற்றி நேர்மையுடன் விமரிசிக்க நமது தினசரிகளுக்கு முதுகெலும்பு ஏது?

ஃ

திருமதி பு. நாகலிங்கம்,
மாதகல் வடக்கு.

கே: நேர்மையானஉழைப்புக்கு பலன் கிட்டுவதில்லையே ஏன்?

ப: உழைப்புக்கு ஒரு நாளும் பலன் கிடைக்காமற் போகாது. கிடைக்கவில்லையென்றால் வேறு யாரோ உழைப்பின் பலனை உறிஞ்சுகிறார்கள் என்று அர்த்தம்.

கே: நாகரீகம் நாகரீகம் என்று நாட்டை நாசப் பாதையில் இழுத்துச்செல்லும் நாரீமணிகளை என்ன செய்வது?

ப: எதுவும் செய்யமுடியாது. அவர்கள் பாட்டுக்கு விட்டுவிடவேண்டியதுதான். ஆபாச நடை, உடை, பாவனைகளால் வரும் அவலத்தை தாங்களாகவே உணர்ந்துகொண்டால் மட்டுமே அத்தகைய நாரீமணிகள் திருந்துவார்கள்.

ஃ

கே. ஆனந்தன்,
மாதகல்.

கே: ஒருவன் பதவி உயர்ச்சியின் பொருட்டு விடவேண்டியது யாது?

ப: தன்மானம்!

கே: அறிஞன் அவமானப்படுவது எப்போ?

ப: அறிவிலிகள் மத்தியில் அறிவுரை வழங்கும்போது!

கே: அறிவாவது யாது? அடக்கமாவது யாது?

ப: பூரணத்துவமடைந்த அறிவில் பிறப்பதே அடக்கம்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி.
கொழும்பு-12


செப்டெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஹெல்த் ஜோய் போட்டியில் 1000 பரிசுகளுக்குமேல் வெற்றி பெறலாம்

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு: ஒரு சிங்கர் குளிரூட்டியுடன் 1000 ரூபா. | 2-ம் பரிசு: ஒரு சிங்கர் தையற்பொறியுடன் 500 ரூபா. | 3-ம் பரிசு: ஒரு குருண்டிக் ரேடியோவுடன் 200 ரூபா. | 4-ம் பரிசு: ஒரு றலி மிதிவண்டியுடன் 100 ரூபா. |

1000 தேற்றப் பரிசுகள்: அத்துடன் வாரந்தோறும்

செப்டெம்பர் மாதத்தில் ஒரே உறையில் வைத்தனுப்பப்படும் மிகக் கூடுதலான பிரவேசப் பத்திரங்களுக்கு வாஹினி ரேடியோ ஒன்று பரிசாக வழங்கப்படும்.
பிரவேசப் பத்திரங்களின் எண்ணிக்கையைக் கடித உறையின் பின்புறத்திற் குறிப்பிடவும்.

உங்களுக்குத் தேவையான முழு விதிகளும் அடங்கிய மேலதிக பிரவேசப் பத்திரங்களை உங்கள் ஹெல்த் ஜோய் விற்பனையாளரிடம் அல்லது கையிருப்பாளரிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.


முடிவு தேதி செப்டெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பிரவேசப் பத்திரங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:
பி. சி. சி. ஹெல்த் ஜோய் போட்டி,
அஞ்சற் பெட்டி இல: 631, கொழும்பு.

கத்தரிக்க அல்லது படிசெய்க | ஹெல்த் ஜோய் போட்டி கூப்பன் | இப்பிரவேசப் பத்திரத்துடன் ஹெல்த் ஜோய் சுற்றுறை ஒன்று சேர்ந்து அனுப்பிவையுங்கள்.

| படம் | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| தலையங்கம் | 3 | | | | |

பெயர்:....................
முகவரி:....................
விற்பனையாளர் அல்லது வியாபாரி பெயர்:....................
....................
முகவரி:....................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# தமிழரசுக் கட்சிக்கு ஓர் எச்சரிக்கை!

தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை இன்று யாழ்ப்பாணத்தில் கூடுகிறது. தேசிய அரசாங்கம் மாவட்டசபை மசோதாவை கைவிட்டுவிட்டதாக அறிவித்த பின்னர் முதன் முதலாக நடைபெறும் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் இது என்பதால் இக்கூட்டம் மிக முக்கியத்தும் வாய்ந்த ஒன்ருக நாட்டு மக்களாலும், ஏனைய அரசியற் கட்சிகளாலும் கவனிக்கப்பட்டு வருகிறது. பொதுச்சபை எடுக்கப்போகும் முடிவுகளை அறிவதற்கு அரசாங்கக் கட்சிகளும்சரி சரி, எதிர்க்கட்சிகளும் சரி அபரிமிதமான ஆவலுடன் காத்திருக்கின்றன.

ஏனெனில், தமிழரசுக்கட்சி இப்போதைய அரசியல் சூழ்நிலையில் எடுக்க இருக்கும் முடிவுகள் நாட்டின் தலைவிதியையும், தமிழ்பேசும் மக்களின் எதிர்கால தலைவிதியையும் நிர்ணமிக்கக்கூடியதாக இருக்கப்போகின்றன. அதுமட்டுமன்றி, தமிழரசுக் கட்சியின் முடிவைத்தான் இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் ஒரு மனதான முடிவாக தென்னிலங்கை மக்கள் கருதுகிருர்கள்.

எனவே தமிழரசுப் பொதுச்சபையின் பொறுப்பு மிகவும், கடினமானதென்பதுடன், பொதுச்சபை மேற்கொள்ளவிருக்கும் முடிவுகள் மிகுந்த இராசதந்திரம் உள்ளதாகவும், தமிழ் பேசும் மக்களுக்கு சரியான வழி காட்டக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திச் சுட்டிக் காட்ட விரும்புகிறேம்.

சில நிபந்தனைகளுக்குட்பட்டு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஐ. தே. கட்சிக்கு உதவி புரிந்த தமிழரக் கட்சி, அந்நிபந்தனைகளில் முக்கியமானதொன்ருன மாவட்ட சபைக் கோரிக்கையை பிரதமர் கைவிட்ட பின்னரும் தொடர்ந்து ஐ.தே.கட்சிஆட்சிக்குஆதரவுகொடுக்கக்கூடாதென்றும் ஆதரவு அளிப்பதை கட்சி உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சியிலுள்ள தீவிர கொள்கைவாதிகள் சிலர் கருத்து வெளியிட்டுவருகிருர்கள்.

மற்றும் சிலரோ மாவட்டசபை மசோதா கைவிடப்பட்ட பின்னரும், அரசாங்கத்துக்குக் கட்சி ஆதரவு அளிப்பதற்கு காரணம், இனத்தின் பொதுவான நன்மை கருதியும், எதிர்க்கட்சியின் சூழ்ச்சியை முறியடிப்பதற்காகவுமே என்று விளக்கமளித்துவருகிருர்கள். கட்சியின் நலனைவிட இனத்தின் நலனே முக்கியம் என்பது இவர்களது வாதமாகும்.

இவ்விருவிதக் கருத்துக்களும் பொதுச்சபையில் நன்கு ஆராயப்பட்டு தெளிவான ஒரு முடிவு எடுக்கப்படவேண்டும். அப்படியெடுக்கப்படும் முடிவு கட்சிக்குள் இருந்துவரும் கருத்துவேற்றுமைகளை நீக்கி மீண்டும்பழைய சுறுசுறுப்பும், உணர்ச்சியும் உத்வேகமும் ஊட்டக்கூடியதாக இருக்க வேண்டும்.

தமிழரசுக் கட்சி, கட்சி நலனைவிட இனத்தின் பொதுநலனையே பெரிதும் விரும்புவதாக கட்சித் தலைவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளது தலைவர்களின் தூய்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கலாம்.

**ஆனல், கட்சி வலுவுள்ளதாக—சிதைந்து போகாதபடி காப்பாற்றப்பட்டு வந்தால் மட்டுமே கட்சியால் இனத்துக்கு நன்மைதேடித் தரமுடியும். தமிழின உரிமைகளைக் காப்பாற்ற நாளை ஓர் மாபெரும் போராட்டத்தை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் கட்சிக்கு ஏற்படலாம். எனவே, கட்சி கட்டுக் கோப்பாகவும், வலிவுள்ளதாகவும், வளர்ச்சியுள்ளதாகவும் இருந்தால்தான், தமிழினத்தின் இழந்த உரிமைகளை மீட்டுத் தர முடியும்.**

**இந்த மிகப் பெரிய உண்மையை பொதுச்சபை உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது.**


அடுத்த பொதுத் தேர்தலிலும், தென்னிலங்கையில் எந்தச் சிங்களக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை. எனவே தமிழரசுக் கட்சியை கட்டுக்கோப்பாகவும், வலிவுள்ளதாகவும் வைத்திருந்தால்மட்டுமே, அடுத்த பொதுத் தேர்தல் முடிவுக்கு பின்னரும் ஆட்சி எது என்று முடிவு செய்யும் வாய்ப்பு கட்சிக்குக் கிடைக்கும்; அதன்மூலம் தமிழினத்தின் உரிமைகளை பெறவும் சந்தர்ப்பம் கிடைக்கும்!

மற்ருேர் உண்மையையும் — அது கசப்பானதாக இருந்தாலும் தமிழரசுப் பொதுச்சபையின் கவனத்துக்கு கொண்டுவருகிறேம்.

தமிழ் பேசும் மக்களிடையே இருந்து வந்த கட்டுக்கோப்பும் ஒற்றுமையும், அண்மைக்காலமாக சிதைந்து வருவது மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும். தமிழ் பேசும் மக்களை சாதி, மத பிரதேசரீதியில் பிளவுபடுத்துவதற்கு இனத் துரோகிகளும், எட்டப்பர்களும், திட்டமிட்டு சூழ்ச்சி செய்து வருகிருர்கள். முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே விரோதமூட்டவும் மிகத் தீவிரமான முயற்சிகள் நடக்கின்றன; ஓரளவு அவை வெற்றி பெற்றும் வருகின்றன.

பிரிந்து பிளவுபட்டு சிதறிக் கிடந்த தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்த எவ்வளவு காலம்—எவ்வளவு தொல்லைகளுக்கிடையில் உழைக்க வேண்டியிருந்தது என்ற உண்மையை நாம் இங்கு நினைவூட்டவேண்டியதில்லை.

எனவே, இனியும் தூங்க வேண்டாம் என்று தமிழரசுக் கட்சியை எச்சரிக்கிறேம். தமிழ்பேசும் மக்களை மீண்டும் இறுக்கமாக ஐக்கியப்படுத்தவும் அந்த ஐக்கியத்தை கட்டிக் காக்கவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை கட்சி உடனடியாக எடுக்க வேண்டியது அவசியமாகும். இதில் துளியும் தாமதம் வேண்டாம்.




நவீன "பத்தினி"

# சிங்களம் மட்டும் சட்டத்தை 1956-ம் ஆண்டே பொன்னம்பலம் ஏற்றுக் கொண்டது தெரியுமா?

## கண்ணுடி வீட்டிலிருந்து கல்லெறியாதீர்! வவுனியா எம். பீ.க்கு தமிழரசுப் பிரமுகர் சூடு!

"தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கமும், கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினமும் தமிழ்மொழிப்பிரச்சினையில் மாறுபட்டு மோதிக் கொள்வதாக தினபதி என்ற போக்கணம்கெட்ட தினசரி மூலம் கேலி பேசியிருக்கிருர் வவுனியா எம். பீ. திரு, சிவசிதம்பரம்.

"1956-ம் ஆண்டு சிங்களம்மட்டும்சட்டம் கொண்டு வரப்பட்ட நாள் முதல் இன்றுவரை இவரோ, இவரது தமிழ் காங்கிரஸ் கட்சியோ தமிழுரிமைபெற எடுத்த நடவடிக்கை ஏதாவது ஒன்றைக் கூற முடியுமா? மாருக, தமிழரசுக் கட்சி நடத்திய போராட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் கல்லுக்குத்துவதில் முன்நின்றனர்.

**சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சி மும்முரமாக போராடி வந்த வேளையிலே 1956-ம் ஆண்டிலேயே—தமிழ் மொழிச் சட்டம் கூட நிறைவேற்றப்படமுன்பு சிங்களம்மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொள்வதே சிறந்தது என்று முதுகில் குத்துவதுபோல கருத்து வெளியிட்டவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்.**

தமிழ் காங்கிரசுக்குள் நேற்றுவந்து புகுந்த திரு. சிவசிதம்பரத்துக்கு இதெல்லாம் எங்கே புரியப்போகிறது? கண்ணுடி வீட்டிலிருந்துகொண்டு கல்லெறிவது ஆபத்தானது. திரு. சிவசிதம்பரம் இதை உணர்ந்து கொள்ளட்டும்."

இவ்வாறு தமிழரசுப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

அப்பிரமுகர் மேலும் கூறியதாவது:-

"திருமலையில் நடைபெற்ற இராசவரோதயம் நினைவுதினக் கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன். அக்கூட்டத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தின் ஆணிவேர் அறுக்கப்பட்டதாக திரு. அமிர்தலிங்கம் கூறவேயில்லை. 'ஆணிவேர்' என்ற சொல்லையே அவர் உபயோகிக்கவில்லை.

'ஆணிவேர்' அறுக்கப்பட்டதாக திரு. அமிர்தலிங்கம் கூறியதாக ஓர் பொய்ச் செய்தியை சிருஷ்டித்து தினபதி, சன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றனதிரு.அமிர்தலிங்கம் அப்படிக் கூறியதாக இந்தஏடுகள்பொய்ச்செய்தி வெளியிடுவதன் நோக்கமே சிங்கள மக்களை தேசிய அரசாங்கத்துக்கும், தமிழரசுக் கட்சிக்கு எதிராகவும் தூண்டிவிடுவதுதான்.

"குணசேனப் பத்திரிகைகளை பாராளுமன்றத்தில் புகழ்ந்து சிந்துபாடிய சிவசிதம்பரம், அப்பத்திரிகைகளில் வந்த பொய்ச் செய்தியை வைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சி மீது கல்லெறிந்து பார்க்கிருர்.

"தனது பெயரால் முன்பக்க முகப்புச் செய்தி ஒன்று வருவதற்காக தினபதி நிருபரைத் திரு. சிவசிதம்பரம் காக்காய் பிடித்ததும் பாராளுமன்றச் சிற்றுண்டிச்சாலையில் சாப்பாடு வாங்கிக் கொடுத்ததும் எமக்குத் தெரியும்."

திரு. அமிர்தலிங்கத்துக்கும் திரு. இரத்தினத்துக்கும் கருத்து வேற்றுமை இருப்பதாக திரு, சிவசிதம்பரம் கனவு காண்கிருர்.

தமிழரசுக்கட்சியின் முயற்சியால்தான் இன்றுள்ள தமிழ்மொழி விசேட விதிகள் சட்டமும், அதன்கீழ் பிரமாணங்களும் இயற்றப்பட்டன.

"தமிழ்மொழியுரிமையை பெற திரு. சிவசிதம்பரமும் சரி, அவரது கட்சியும் சரி, என்ன செய்திருக்கின்றன? ஒரு போராட்டம் நடத்தியதுண்டா? ஒருசிறுதியாகம் தானும் செய்ததுண்டா? மாருக, தமிழரசு கட்சியின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையிட்டு வருகிருர்கள். கண்ணீரும் செந்நீரும் சிந்தி, தமிழுரிமைகளை சிறுகச் சிறுகப் பெற்றுவரும் தமிழரசுக் கட்சி மீது குற்றம் சொல்ல இவர்களுக்கென்ன யோக்கியதையிருக்கிறது!


"திரு. அமிர்தலிங்கத்தை "போராடிக் களைத்த தளபதி" என்று வர்ணிப்பதன் மூலம், திரு. அமிர்தலிங்கம் தலைமைதாங்கி, தமிழுரிமைகளைக் காப்பாற்றுவதற்கு இதுகாலவரை போராடி வந்ததை திரு. சிவசிதம்பரமே மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிருர்: அதற்கு நன்றி.

"தமிழ் மொழிச் சட்டத்தால் எந்தப் பயனுமில்லையென்று திரு. சிவசிதம்பரம் கருதினல், அவரும் அவரது கட்சியினரும் அதை ஆதரித்து வாக்களித்தது ஏன்?

உரிமைபெற நாம் செய்யும் முயற்சிகளில்ஒத்துழைக்காவிட்டாலும், முதுகில் குத்தாமலிருக்க சிவசிதம்பரம் தன்னை முதலில் பழக்கப்படுத்திக் கொள்ளட்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியசிங்கம் நாற்பது



சிந்தனைகள் தேங்கி நிற்கும்
இனிய முகமொன்று
சிரிப்பாலே கவர்ந்தி ழுக்கும்
பிள்ளைத் தனமிரண்டு
சுருக்கங்கள் சுழல்கின்ற
நெற்றியது மூன்று
சுடு சொல்லேயறியாத
நல்ல மனம் நான்கு.

பகைவரையும் நண்பர்களாய்
நினைக்கின்ற தன்மை
பதவிகளைத் துச்சமென
மதிக்கின்ற திண்மை
தகைமைதனைப் போற்றுகின்ற
தண்ணளி சேர் உள்ளம்
தர்மத்தின் வழி நின்ற
தங்கக் குணம் எட்டு!

பொய்பேசி பணம் சேர்க்கும்
வழக்கறிஞருள்ளே
பொய்பேச மறுத்திட்ட
புனிதமனம் கொண்டோன்
தெய்வத்தை நம்புவோன்;
தீமையறி யாதோன்
தீனர்க்காய் வாதாடும்.
திறன் பன்னிரண்டு.

நேர்மையது தவருத
நெறியோடு என்றும்
நெஞ்சமதில் வஞ்சகமே
எண்ணுத சீலம்
பார்வையிலே யாவரையும்
கணிக்கின்ற நுட்பம்.
பகுத்தறியும் வாழ்வோடு
கூட்டு பதினறு!

அரசியல் என்பதோர்
சூதாட்டம் என்று
அறிஞர்கள் கூறியதை
பொய்யாக்கும் வாய்மை!
கரவோடு தமிழினத்தை
விலை பேசியோரை
காலோடு கால் பின்ன
ஓடவைத்த சீர்மை!

தலைமைக்கு ஒருவனுய்
வாழ்ந்திட்ட தன்மை
தாய் போல யாவரையும்
அணைத்திட்ட தண்மை
விலை செல்ல முடியாத
ஒழுக்க நெறியோடு
வீரத்தையும் சேர்த்து
இருபத்தி ரெண்டு!

வடக்கென்றும் கிழக்கென்றும்,
மலை நாடு என்றும்,
வலிவிழந்த தமிழர்களை
இணைத்திடுதல், நாட்டில்
நடக்காது என்றவர்கள்
தலை சாயும் வண்ணம்,
நம்மவரை சேர்த்திட்ட
நல்ல தொரு பெருமை!

தோட்டத்துத் தமிழர்களின்
குடியுரிமை பறித்த
தொல்லை தரு சட்டத்தை
எதிர்த்திட்ட ஆண்மை!
காட்டியே கொடுத்திட்ட
கயவர்களை நீத்து,
கனிவுடனே தமிழரசு
கண்டிட்ட வலிமை!

இரவென்றும் பகலென்றும்
பாராது என்றும்
இயக்கத்தின் வளர்ச்சிக்காய்
உழைத்திட்ட பண்பு
சிறை செல்லும் வேளையிலும்
சலனமற்ற நெஞ்சு
சிந்தனையின் தெளிவோடு
இருபத்தி யெட்டு.

குடியேற்றத் திட்டங்கள்
எனும் போர்வையின் கீழ்
குவலயத்தில் தமிழர்களின்
குடிநிலத்தைப் பறிக்கும்
நெறி கெட்ட செய்கைதனை
முறியடித்த வன்மை
நீதிக்காய் வாதாடும்
பிடிவாத உள்ளம்!

காலிமுகக் கடற்கரையில்
அறப்போரின் போது
காலிகள் முன் காட்டி நின்ற
காந்திய வீரம்!
போலிகள் கண்டஞ்சுகின்ற
புரட்சிக்கோர் சின்னம்
புதுமைகளை விரும்பிநின்ற
புதுலகச் சிற்பி.

திருமலைக்கு நடந்து சென்ற
திருப்பாதத் தோடு
தீர்மானம் நிறைவேற்றி
வைத்த செயற் திறமை
திரளான கூட்டத்தில்
வரும் கேள்விக் கெல்லாம்
திக்காமல் திணருமல்
பதில் சொல்லும் அருமை!

கல்லோயா கலவரங்கள்
நடைபெற்ற போது
கவலையின்றித் தமிழர்களை
காத்திட்ட துணிவும்
எல்லோரும் ஓர் குலமாய்.
வாழும் பெருநோக்கில்
இகழ்ச்சியுடன் சாதிகளை
எதிர்த்து நின்ற ஆற்றல்!

இயற்கையதன் சீற்றத்தால்
மட்டுநகர் மக்கள்
எவ்வழியும் தோன்ருது
கைபிசைந்த போது
வலக்கை போல் அன்னவரின்
துயர் துடைக்க வென்றே
வந்து நின்ற வள்ளலவன்
தன்மை முப்பத்தெட்டு

கல்வியிலே பின் தங்கும்
மலைநாட்டு இளைஞர்
கருத்துடனே நல்லறிவு
பெற்றிடவும் வேண்டும்
என்ற பெரு நோக்கோடு
உதவிட வந்துற்ற
இனிய தமிழ் சிங்கமது
எமது வன்னிச் சிங்கம்!

எங்கள் தமிழ் மக்களது
விடுதலையைக் காண
இணைப்பாட்சி கோருவது
துரோகமது என்ருல்
என்வாழ்வை இழந்திடினும்
தமிழ் ஆட்சி காண்பேன்'
என்றவன் னியர் வீரம்
நாற்பதென்று சொல்வேன்.

**கோவை மகேசன்**

# இலங்கைமீது தமிழகம்படையெடுக்கவேண்டுமென்று திருமதி பண்டா உள்ளூர ஆசைப்படுகிருரா?

## அறிஞர் அண்ணுவின் காஞ்சி ஏடு சிறிமாவுக்கு விடுக்கும் கேள்வி!

(காஞ்சீபுரத்திலிருந்து வெளிவரும் அறிஞர் அண்ணுவுக்கு சொநதமான 'காஞ்சி' என்னும் வார இதழ் 'பண்டாவுக்கு மீண்டும் பதவி' என்ற தலைப்பின்கீழ் 1-9-68 இதழில் தீட்டிவுள்ள ஆசிரியத் தலையங்கம் இது.)

தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், தன் படைபலத்தைப் பயன்படுத்தி, இலங்கையின் மீது படையெடுத்து—தன்னைத் துரத்திவிட்டுவிட்டு, ஆட்சியில் அமர்ந்திருக்கும் திரு. சேனநாயகா அவர்களை, பதவியைவிட்டு விரட்டிவிடவேண்டும் என்பதில் தீராத விருப்பம் இருப்பதனை திருமதி பண்டாரநாயகா அவர்கள் அடிக்கடி வெவ்வேறு விதமான சொற்ருெடர்களால் விளக்கிக் கொண்டே வருவது வருந்தத்தக்கதாகும்.

தீயவை, தீய பயத்தலான் தீயவை தீயினும் அஞ்சப் படும என்ற நீதியையே அகிலத்துக்கு அளித்திருப்பது தமிழகம். அவ்வாறிருக்கும் போது தீயதான இந்தக் கருத்தை திருமதி பண்டா அவர்களால் எப்படித்தான் கற்பனை செய்து பார்க்க முடிந்ததோ தெரியவில்லை.

திருமதி பண்டாவுக்கு தமிழகத்தின் மீதும் தி. மு. கழகத்தின் மீதும், இங்குள்ள காங்கிரசுக்காரர்களை விட அதிகமான காழ்ப்பு இருப்பதற்குக் காரணம் எதுவாயிருக்கக் கூடும் என்பதனை யூகிக்கக்கூட முடியவில்லை.

இலங்கையில் தமிழகத்துக்குத் துளியும் தொடர்பில்லாத வகையில் முழுக்க முழுக்க தனித்தே இயங்கிக் கொண்டுவருகிற தி. மு. கழகத்தைக் காய்ந்துகொள்ள வேண்டும் என்று கருதுகிற போதெல்லாம், இலங்கை தி' மு. க.வையும் தமிழகத்தையும் இணைத்து இணைத்துக் காய்ந்துகொள்ள அவர் மறந்தும் தவறுவதில்லை.

இலங்கைக்கழகத்துக்கும், தமிழகக் கழகத்துக்கும் துளியும் தொடர்பில்லை என்று தமிழக தி. மு. க. பொதுச் செயலாளர் என்ற முறையிலும், தமிழக அரசின் முதலமைச்சர் என்ற வகையிலும் அறிஞர் பெருந்தகை அண்ணு அவர்கள் மிகத் தெளிவாக விளக்கிச் சொல்லி இருப்பதுடன், கடந்த ஆண்டு, இது தொடர்பாக ஒரு அறிக்கையும் வெளியிட்டிருந்தார்கள்.

என்ருலும், எங்கோ ஓர் மூலையில் படுத்துறங்கிக் கொண்டிருந்துவிட்டு, கூட்டத்துக்கு அழைப்பு வந்தவுடன் வேகமாக ஓடிச் சென்று மேடையேறிநின்று, கழகத்தைத் தூற்றுவதென்பது அவரது வாடிக்கையாக இருப்பதிலிருந்து உலக அரசியல் நிகழ்ச்சிகளையும், அன்ருட நாட்டு நடப்புக்களையும் தெரிந்து வைத்துக் கொண்டுதான் அரசியல் மேடை ஏறுகிருர் என்பதனை நம்பமுடியாமலே போய் விடுகிறது.

இலங்கை அரசியல், இந்தி[illegible] அரசியலுக்கு, குறிப்பாகத் தமிழகத்தின் அரசியலுக்கு மிக மிக அற்பாற்பட்டதொன்று என்பதுடன் தொடர்பே இல்லாத ஒன்று என்பது நடைமுறையாயிருந்தும், ''தமிழ்நாடு இலங்கை மீது படையெடுக்கும்'' என்று அவர் திரும்பத் திரும்பச் சொல்லி வருவது, படையெடுக்கவேண்டும் என்ற அவரது இதய வேட்கையை வெளிப்படுத்திக் காட்டுவதாகத்தான் பொருள் கொள்ளமுடியும்.

சென்னை மாநிலம் என்ற பெயரை, 'தமிழ்நாடு' என்று இங்குள்ள ஆட்சி, மாற்றம் செய்ய விரும்புவதற்கும், இலங்கைமீது படையெடுப்பது என்பதற்கும் என்ன தொடர்பு என்பதே புரியவில்லை.

தமிழகத்தில், தி. மு. க. தமிழர் நலனுக்காக ''தமிழர் படை'' என்ற பெயரில் இளைஞர் கழகமொன்று அமைத்திருப்பதற்கும், இலங்கை மீது ராணுவப் படையெடுப்பிற்கும் என்ன சம்பந்தமிருப்பதாக திருமதி பண்டாவினுல் உணர முடிகிறது என்பதும் புலனுகவில்லை.

தமிழகம், இலங்கையின் மீது படையெடுத்த காலம் ஒன்றுண்டு. அது கி. மு. மூன்ரும் நூற்ருண்டிலும். கி. பி. இரண்டு அல்லது மூன்ரும் நூற்ருண்டிலும். இறுதியாக பதின்மூன்ரும் நூற்ருண்டிலும் நடைபெற்றிருக்கிறது.

முதல் படையெடுப்பின் மூலம்தான் ஏழாரன் என்று இலங்கையின் மகாவம்சம் விளிக்கும் எல்லாளச் சோழப் பேரரசன், இலங்கைக்கே மறு வாழ் வளித்து நாகரிகமுடைய—ஒரு ஒழுங்கு நியதிக்குட்ட அரசியலை வகுத்தளித்திருக்கிருன் என்பதனை திருமதி பண்டா புரியாமல், இந்தப் படை எடுப்புக்கள் பற்றிப் பேசி இருக்க முடியாது.

அடுத்தடுத்த படையெடுப்புக்களிலும், இலங்கை புதுவாழ்வும், பொலிவும் தான் பெற்றிருக்கின்றன. எனவே, அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி இப்போது மீண்டும் தி. மு. கழகம் படையெடுக்கும் என்று கற்பனை செய்வதன் மூலம் வளர்ந்து வந்திருக்கிற அகிலத்தின் அரசியலையும், உலகப் போக்கையும் புரிந்துகொள்ள முடியாத

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாந் தமிழியக்கம் மீண்டும் ஆரம்பமாகும்

## வவுனியா, திருமலையில் விவசாயப் பண்ணைகள் உருவாக்க திட்டம்

### தமிழரசு வாலிப முன்னணி தீர்மானங்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் எல்லாம்தமிழ் இயக்கத்தை மிகத் தீவிரமாமாக நடைமுறைப் படுத்த ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பதென தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச்சபை தீர்மானித் திருக்கிறது.

ஆகஸ்ட்மாத இறுதியில், யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

(1) தமிழ் மொழிச் சிறப்புச் சட்ட விதிகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது முடியாததாயின் அஹிம்சை முறையில் தமிழரசு வாலிப முன்னணி எல்லாந் தமிழில் நடைபெறப் போராட்டங்களை நடாத்துவதென இச்சபை தீர்மானித்திருக்கின்றது.

(2) வருங்கால வாலிபர்களிடத்தில் தமிழ் நிலப்பற்றை ஏற்படுத்தவும் விவசாயம் கைத்தொழில் ஆகிய பொருளாதாரத் துறைகளில் வாலிபர்களை ஈடுபடுத்தவும் முதற்படியாக வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் விவசாயப் பண்ணைகளை உருவாக்க வேண்டுமென்றும் இச்சபை தீர்மானிக்கின்றது,

(3) தமிழரசு வாலிப முன்னணிமாநாட்டை மட்டுநகரில் தைமாத முதற்றிங்களில் நடாத்துவதெனவும் இச்சபை தீர்மானிக்கின்றது,

(4) அமரர் வன்னியசிங்கம் அவர்களின் நினைவு தினம் புரட்டாதி மாதம் 17ந் நாள் முதல் ஐப்பசி 2ந் நாள் வரைக்கும் தொகுதிகள் தோறும் கொண்டாடுவதெனவும் இச்சபை தீர்மானிக்கின்றது.

## பல்லாண்டு வாழ்க!



அன்று தமிழை வளர்க்க சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழகத்தில் இருந்தார்கள். இன்று அவர்கள் மூவரும் ஒரே உருவமாக ஒன்று திரண்டு அறிஞர் அண்ணாவாக காட்சியளிக்கிறார்கள். ஆம், உலகெங்கும் வாழும் ஐந்து கோடி தமிழ் மக்களின் எழுச்சியின் சின்னமாக-தமிழர் விடுதலை உணர்ச்சியின் உயிர் மூச்சாக நடமாடுகிறார் அறிஞர் அண்ணா. இலட்சக்கணக்கான அன்புத்தம்பிகளால் அண்ணா அண்ணா என்று ஆர்வமுடன் அழைக்கப்படும் அறிஞர் அண்ணா தமிழ் நாட்டின் ஆட்சிச்சக்கரத்தை கையிலே பிடித்தது முதல் தமிழர்களின் கனவுகளை ஒவ்வொன்றாக நன வாக்கி வருகிறார். இம்மாதம் 15ம் திகதி 60ம் ஆண்டிற் காலடி எடுத்து வைக்கும் பேறு பெற்ற அண்ணா அவர்கள், இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழர்களின் இலட்சியத்தை ஈடேற்றிவைக்க வேண்டுமென்று வாழ்த்துகிறோம். தற்போது அமெரிக்காவில் சிகிச்சை பெறும் அண்ணா அவர்கள் விரைவில் நலம் பெற்று நாடுதிரும்ப வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

செக் நாட்டில் ஒரு பார்வை:

# தேற்றம்

—பாண்டியூரன்—

நெஞ்சார விதைநட்டு நெடுமரத்தின்
நிழல் கண்டு பழமுண்டு நிறைவுகாண
அஞ்சாமற் காடழித்து அழகுசெய்தார்,
அணியணியாய் மரம் நட்டுப் பேணிவந்தார்
பஞ்சமா கைகளிலே பலம்; பிறரின்
படுபாட்டில் விளைகின்ற பழம்புசிக்க...?
பிஞ்சென்றும் பாராமற் பலாமரத்திற்
பேரீச்சம் கிளையொட்டப் பிசினை வைத்தாய்!

உயிர்கொல்லும் கிருமிகளே! 'செக்'குநாட்டில்
ஒற்றுமையைக் குலைக்கின்றீர்; உலகமக்கள்
செயற்பட்டு விட்டாலோ சீக்கிரத்தில்
செய்வார்கள் சிகிச்சையதோ செக்கு மண்ணில்
அயராது எழுகிறது ஆசுபத்தி
அறுவைக்குத் தயாரானார் அனேக 'டாக்டர்'
வயிரத்தால் மனமுள்ள மக்கள் இன்று
வளர்கின்றார் மணிதீட்டி வடிவுகாண்பார்.

புற்றுநோய்க் கிருமிகளைப் போலவுள்ள
புலிக்குட்டீ! பசுத்தோலைப் போர்த்ததேனோ?
இற்றைக்கு நீதலைவன் என்றுகாட்டில்
எகிறுதே! 'காகரினை' எங்கே காணோம்...?
முற்றாத கோபத்தை முற்றவைத்தால்
முடிப்பாய் நீ ஒரிருவர் மூச்சை; ஆனால்...
செற்றவர்க்குச் செற்றவராம் சிங்கமென்னும்
செகத்துக்கு முன்னாலே சிறுதூசாவாய்!

வானத்திற் கோளங்கள் வலம்வரற்கு
வகுத்துள்ளா னோர்தலைவன் வல்லபாதை!
ஏனப்பா அதைமாற்ற எண்ணுகின்றாய்?
எவர்க்கும் இங் கடிமையிலை இயற்கை! உங்கள்
ஞானத்தை உறைபனியில் நாட்டிவையும்
நற்சாலி விளைதரையை நஞ்சாக்காதே!
மானத்தை விதைக்கின்ற வயல்களெங்கள்
வயல்; உங்கள் களைபற்ற வகை நீர் பாய்ச்சோம்!

மாற்றிதயம் வைக்கின்ற வையகம்மே!
மனிதர்க்குள் மந்தைகளை வைத்தாயோ நீ?
ஏற்றிய அவ் விதயத்தில் ஈரமற்றோர்
ஈட்டியினைப் புறம்நின்று எறிகின்றாரே!
ஆற்றலுக்கு அணிசெய்த அரசேயுன்றன்
ஆண்மையிலே மலடேறி அழிந்து போச்சோ?
சீற்றத்தைப் பனிபோர்த்தெ ன்செய்யும்; ஓர் நாள்
செய்யவொளிக் கதிர் வந்தாற் சிரிக்காதாமா?

அடடா நாம் அறிவிலியோ 'செக்'கு நாட்டில்
அஸ்தமன மாயிற்றென் றழுது சோர;
தொடரும் நாள் விடிவென்று சொல்வதற்குச்
சோகத்தின் செங்குருதி சிந்தும் மாலை!
அடடாபொன் மயமாகும் அடுத்த காலை.
ஆதவனும் அவ்விடத்தில் அரும்பி நிற்பான்!
விடடாவுன் கவலைகளை; வேட்டையாடும்
வேடர்களை விவசாயம் செய்யச் சொல்லு!

## முஸ்லிம்களுக்கு பிரதமரின் எச்சரிக்கை

'இந்நாட்டிலுள்ள சிங்கள வகுப்பு வெறியர்கள் சிலர், இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களிடையே பிளவை ஏற்படுத்த துடியாய்த் துடிக்கிறார்கள். ஒரு சிறுபான்மை இனமான தமிழினத்தவருக்கு எதிராக மற்றோர் சிறுபான்மை இனமான முஸ்லிம்களை தூண்டிவிட முயற்சித்து வருகிறார்கள்.

"சிறுபான்மை மக்கள் தங்களுக்குள் பிளவுபட்டுக் கொண்டால், அது சிங்கள இன வெறியர்களுக்கு வாய்ப்பாகி விடும். சிங்கள வெறியர்களின் பேச்சில் முஸ்லிம்கள் மயங்கி, தமிழினத்தவரை தாக்குவதற்கு ஒத்துழைத்தால், சிங்களவெறியர்களின் அடுத்த நடவடிக்கை முஸ்லிம்களை ஒழித்துக்கட்டுவதாகவேயிருக்கும்"

இவ்வாறு ஹோட்டல் தப்ரபேனில் முஸ்லிம் வர்த்தகர்களால் அளிக்கப்பட்ட இராப்போசனவிருந்தொன்றில் பேசிய பிரதமர் திரு டட்லி சேனநாயகா எச்சரித்துள்ளார்.

## இலங்கை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திருமதி பண்டா என்றுதான் முடிவு கட்டவேண்டி இருக்கிறது.

எனவே, இலங்கையின்மீது தமிழகம் படையெடுக்கும் என்று சொல்வதெல்லாம், அப்படி எடுத்தாவது இப்போதைய ஆட்சியினை அழிக்[illegible] யைக் காட்டிக்கொள்ளவே பயன்படமுடியுமே ஒழிய, உலகை ஏமாற்றிதான் மீண்டும், பதவியில் அமர, அது வழி ஏற்படுத்தாது என்பதை உணர்ந்துகொண்டு, ஒழுங்கான—நாணயமான உள்நாட்டு அரசியலை அவர் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்!

## கிளிநொச்சி எம். பி.யின் கோரிக்கைகள்

இம்மாதம் 4-ம் திகதி பாராளுமன்றத்தில், வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கிளிநொச்சி எம். பீ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பின்வரும் கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு விடுத்தார்.

(1) இலங்கையின் சுயதேவையைப் பூர்த்திசெய்யத்தக்கதாக உப்புச் சோடாவையும் குளோரினையும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் தயாரிக்கவேண்டும். அதற்கேற்றமுறையில் இத்தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட வேண்டும்.

(2) துணுக்காயில் நெசவு ஆலை ஒன்று நிறுவப்பட வேண்டும்.

(3) வல்லை வெளியிலுள்ள நெசவு ஆலை வளர்ச்சியடைவதற்கு அரசாங்கம் உதவி புரியவேண்டும்.

(4) தென்னை மரங்கள் அடர்த்தியாக உள்ள பளையில் ஓர் தும்புத் தொழிற்சாலை நிறுவப்படவேண்டும்.

(5) பனம் பொருட்களை பயன்படுத்தி கைத்தொழில்களை ஆரம்பிப்பது குறித்து ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும்.

(6) மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு, போக்குவரத்து வசதி, வீட்டு வசதி, குடிதண்ணீர் வசதி, பிடிக்கும் மீன்களை சந்தைப்படுத்தும் வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித் தரவேண்டும். கிளிநொச்சித்தொகுதியிலே உள்ள முள்ளியான், கட்டைக்காடு வெற்றிலைக் கேணி, இரணைதீவு ஆகிய பகுதி மீனவர்கள் இவ்வசதிகளின்றி கஷ்டப் படுகிறார்கள்.

(7) மீன் விற்பனை நிலையங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் ஏற்படுத்தவேண்டும்.

(8) கடற்றொழிலில்ஈடுபட்டிருக்கும் கிளிநொச்சி தொகுதிமக்களில் எவருக்கும் இயந்திரப்படகு கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு ஊருக்கும் ஒன்று, அல்லது இரண்டு இயந்திரப்படகு தரப்படவேண்டும்.

## "நூரளையில் பிரயாணிகள் தங்குமடம் அமைக்குக"

நூரளை பஸ் நிலையத்தில் பிரயாணிகள் தங்குமடம் இல்லாததால் பிரயாணிகள் கஷ்டப்படுவதாகவும், விரைவில் தங்குமடம் ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இ. போ. ச.வுக்கு எழுதிய கடிதமொன்றில் இ. தொ. கழகத்தின் கைத்தொழில் உறவு செயலாளர் திரு. செ. கலியபெருமாள் கோரியுள்ளார். தேசியமய சேவை அமைச்சருக்கும் இதுபற்றி திரு கலியபெருமாள் புகார் செய்துள்ளார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு எம். பீக்கள் எவர் மீதும் இலஞ்சக் குற்றச்சாட்டு கிடையாது!

## சனப்பிரநிதிகள் சபையில் சபாநாயகர் அறிவிப்பு!

**"தமிழரசுக் கட்சியின் எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராகவும் இலஞ்சப் புகார் எதுவும் செய்யப்படவில்லை. இதுபற்றி முன்பும் என்னிடம் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் விசாரித்தார். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினருக்கும் எதிராக இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதா வென்றும், அக் குற்றச்சாட்டு பற்றி விசாரணை செய்ய இலஞ்ச விசாரணைக் கமிஷன் எனது அனுமதியை கோரியதா என்றும் அந்த உறுப்பினர் கேட்டிருந்தார். அப்படி என்னிடம் தமிழரசுக்கட்சி எம். பீ. க்களில் எவருக்கு எதிராகவும் விசாரணை நடத்த அனுமதி கோரப்படவில்லை யென்று அவரிடம் தெரிவித்துவிட்டேன்"**

இவ்வாறு இம் மாதம் 9-ம் திகதி பாராளுமன்றத்தில் நல்லூர் எம். பி. டாக்டர். இ. மு. வி. நாகநாதன் பேசிக்கொண்டிருக்கும் போது இடைமறித்து சபாநாயகர் திரு. ஷேர்லிகொரியா தெரிவித்தார்.



டாக்டர் நாகநாதன் பேசும்போது கூறியதாவது:

,தமிழரசுக்கட்சிக்கு எதிராக சிலர் கோழைத்தனமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார்கள். தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டிருப்பதாகவும், அதனால்தான் மாவட்டசபை இல்லையென்ற பின்பும், கட்சி அரசாங்கத்தை ஆதரித்து வருவதாகவும் சிலர் கூறித்திரிகிறார்கள்".

இச்சமயத்தில் தான், சபாநாயகர் குறுக்கிட்டு மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

தொடர்ந்துடாக்டர் நாகநாதன் பேசும்போது கூறியதாவது:

'நான் சபாநாயகருக்கு நன்றிசெலுத்துகிறேன். சபாநாயகர் இவ்வளவு தெளிவாகக் கூறிய பின்னரும் சிலர் அவ்வாறு கூறித் திரிகிறார்கள். 'றெட்பிளாக்' என்ற பத்திரிகையும் தமிழரசுக்கட்சி எம். பீக்களுக்கு எதிராக இலஞ்சக் குற்றச் சாட்டிருப்பதாக எழுதியிருக்கிறது.

சபாநாயகர்: அப்படியானல் ஏன் நீங்கள் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாது?

திருமதி பண்டா: அந்தப் பத்திரிகைக்கு எதிராக நீங்கள் நடவடிக்கை எடுக்கலாமே;

நாகநாதன்: இதிலுள்ள பிரச்சினை என்னவென்றல் அதில் எந்தப் பெயரும் குறிப்பிடப்படாததுதான். ஆகவே இச் சபையை அவமதித்ததாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திருமதி பண்டா: ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் என்ன!

நாகநாதன்: எங்களை அவமானப்படுத்தும் சில பேர்வழிகள் இந்தச் சபையிலும் இருக்கிறார்கள். வெளியிலும் இருக்கிறார்கள். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பதில் நன்றாக நொருக்க வேண்டும். நான் இதனைச் செய்துவிடுவேன். ஆனல் இப்போது சற்று முதிர்ச்சியடைந்து இருக்கிறேன்"

## ம. பொ. சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

காங்கிரசின் அழைப்பை ஏற்று, அதன்மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் அன்பை இழப்பதற்கு ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்கள்.

"தமிழ்த் துரோகிகளைக் கண்டாலே தனது பார்வையாலே சுட்டெரித்துவிடும் ம. பொ. சி. அவர்கள், இலங்கைத் தமிழ் மக்களால் துரோகிகள் எனக் கருதப்படும் ஒரு கட்சியினரின் மாநாட்டில் எப்படி கலந்துகொள்வார்?

"10 இலட்சம் இந்திய வம்சாவழியினர் தங்கள் குடியுரிமைகளை இழப்பதற்கு காரணமான அக்கிரமச் சட்டத்தை ஆதரித்த ஒரு கட்சியினரின் மாநாட்டில் எப்படி ம. பொ. சி. ஐயா கலந்துகொள்வார்?

"தானே பாடுபட்டு வளர்த்த தமிழ்நாடு காங்கிரஸ் தமிழ் விரோதப் போக்கில் செல்வதைக் கண்டு வெறுப்புற்று அதைவிட்டு விலகி, தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியை ஒழித்துக்கட்டியவர் ம. பொ. சி. தமிழ்த் துரோகிகளை-ஆங்கில தாசர்களை ம. பொ. சி.க்கு கட்டோடு பிடிக்காது. அப்படிப்பட்டவர் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மாநாட்டிலா கலந்துகொள்வார்?

"இதுமட்டுமல்ல, கொள்கைரீதியிலும் ம. பொ. சி.க்கும் இலங்கைத் தமிழ் காங்கிரசுக்கும் அடிப்படை வேறுபாடுண்டு. மா. பொ. சி. அவர்கள், முழுமை பெற்ற மாநில சுயாட்சிக்காக ஓயாது ஒழியாது போராடி வருகிறார். இலங்கையிலுள்ள தமிழ் காங்கிரசோ, மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, தீவிரமாக எதிர்க்கும் கட்சியுமாயிற்றே!

இவ்வாறு அப்பிரமுகர் தெரிவித்தார்.

### வல்வெட்டித் துறை சம்பவம்:

## அட்டோர்னி ஜெனரல் திணைக்களத்தின் மீது சாவகச்சேரி நவம் கண்டனம்!

**"வல்வெட்டித் துறையில் இளைஞன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டது சம்பந்தமான வழக்கை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பாது அட்டோர்னி ஜெனரல் திணைக்களம் தடுத்து வைத்தது கவலைக்குரியது."**

இவ்வாறு சனப் பிரதிநிதிகள் சபையில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கண்டனம் தெரிவித்துள்ளார். இம்மாதம் 8-ம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய திரு: நவரத்தினம் மேலும் கூறியதாவது:-

"வல்வெட்டித்துறையில் ஓர் இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டான். இதுபற்றி விசாரணை செய்த மாவட்ட நீதிபதி இந்த இளைஞன் கொல்லப்பட்டுள்ளதாக தீர்ப்பளித்தார்.

"இந்த இளைஞனை கொலை செய்தது யார் என்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

"இந்த வழக்கை உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பாது அட்டோர்னி ஜெனரல் திணைக்களம் தடுத்து வைத்தது கவலைக்குரியதாகும். அட்டோர்னி ஜெனரல் திணைக்களம் இவ்விட்யத்தில் முறையாக நடந்து கொள்ளவில்லையென்று கொல்லப்பட்ட இளைஞனது உறவினர்கள் கருதுகின்றனர். ஆகவே இவ்வாறன சம்பவங்கள் இனியும் நடக்க அனுமதிக்கக் கூடாது.

நீதிமன்றக் கட்டிடங்கள் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றன. யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றக் கட்டடம் புதுப்பிக்ப்படவேண்டும். கிளிநொச்சியிலுள்ள வட்டார நீதிமன்றம் ஆட்டுக் கொட்டிலை விட மோசமாக உள்ளது.

"இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்கீழ் பிரஜா பதிவுக்காக மலைநாட்டுத் தமிழர்களால் அனுப்பி வைக்கப்படும் மனுக்களில் சமாதான நீதவான் ஒருவர் கையொப்பமிடவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. மலையகத்தில் போதிய சமாதான நீதவான்கள் இல்லாததால் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் அனுப்புவதில் மலையக தமிழர்கள் நிரம்பத் தொல்லைப்படுகிறார்கள்.

எனவே மலையகத்தொழிற் சங்கத் தலைவர்களை சமாதான நீதவான்களாக நியமிக்க நீதிமந்திரி நடவடிக்கை எடுக்கவேண்டும்."

### பாரதி விழா

ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினரின் ஆதரவின்கீழ் பாரதிவிழா இன்று (14-9-68) மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறுகிறது. விழாவில், திரு. எம். ஏ. ரகுமான், திரு. உமாபதி சிவம் பீ.ஏ., ஜனுப் எம். ஏ. எம். சுக்கிரி, எஸ். பொன்னுத்துரை ஆகியோர் பேசுகிறார்கள்.

திரு. கே. எஸ். நடராசா தலைமையில் நடைபெறும் கவியரங்கில், திருவாளர்கள்: சத்தியசீலன், அம்பிகைபாகன், சக்தீ அ. பாலையா, சில்லையூர் செல்வராசன் ஆகியோர் பங்கு ஏற்கிறார்கள். அடுத்து நடைபெறும் பாரதியார் சிறப்புக் கவிதை பற்றிய கருத்தரங்கில், திரு. ஈழவேந்தன், செல்வி சீதாதேவி கணபதிப்பிள்ளை, திரு. க. [illegible] ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.


கீழ் கண்ட இடங்களுக்கு சுதந்திரன் விற்பனையாளர்கள் தேவை

கைதடி — முள்ளைத் தீவு

இநுவில் — நிக்கவ ரெட்டிய


ரக்வானை — லிந்துலை

விபரங்கட்கு

சுதந்திரன் விநியோக அதிபர்

த. பெ. இல 1183 — கொழும்பு-12





பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நெ. 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தந்தி: [illegible]

தொலைபேசி 3597—6522


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### தமிழ் மொழிச் சட்டத்தை முறையாக அமுல் நடத்த

# அரசாங்க ஊழியர்களுக்கு தமிழ் வகுப்பு நடத்துங்கள்!

## அமிர்தலிங்கம் கோரிக்கை!

“இந் நாட்டிலே எந்த மூலை முடுக்கிலிருந்தாலும், தமிழ்மொழி மூலம் கல்வி கற்ற ஒருவன், அரசாங்கத்துக்கு தமிழில் கடிதம் எழுதவும், தமிழிலே பதில் பெறவும், தமிழ்மொழி விசேட சட்டப்படி உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழ்க்கடிதங்களுக்கு தமிழிலே பதில் எழுத வேண்டிய கட்டாயம் அரசாங்க ஊழியர்களுக்குண்டு. எனவே எல்லா அரசாங்க ஊழியர்களையும் சிங்களத்துடன் தமிழிலும் தேர்ச்சிபெறச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

யூ. என். பி. யின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட அரசாங்க ஊழியர்கள் இருமொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தும் அக் கொள்கை இதுவரை செயற்படுத்தப்படாதது துரதிருஷ்டம் வாய்ந்தது. எனவே இனியும் தமாதிக்காது எல்லா அரசாங்க ஊழியர்களும் ஓரளவு தமிழிலும் தேர்ச்சியடையச் செய்ய வழிகாண வேண்டும்”

இவ்வாறு இம்மாதம் 1-ம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

‘ஒரு அரசாங்கம் திறமையுடன் செயல்பட வேண்டுமானால் திறமையுள்ள அரசாங்க ஊழியர்கள் அதற்கு இருக்க வேண்டும்: முந்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள், இந்நாட்டில் பெருந்தொகையான அரசாங்க ஊழியர்களிடையே வெறுப்பையும், அதிருப்தியையும் விளைவித்தது. இதன் பயனாக, ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்கள், தங்கள் சேவைக்காலம் முடியு முன்னரே இளைப்பாறினார்கள்: அதனால் இன்று அவர்கள் மிகுந்த கஷ்டமடைந்து வருகிறார்கள்.

இந்த அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கை அரசாங்க ஊழியர்களுக்கு முன்னைய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட கஷ்டங்களையும் தொல்லைகளையும் அகற்றி அவர்களுக்கு நீதி வழங்க முன்வந்ததுதான். அந்த நோக்கத்துடன் தான் 700ம் இலக்க திறைச்சேரிச் சுற்றறிக்கையை அரசாங்கம் வெளியிட்டது. பழைய அரசாங்க ஊழியர் பிரச்சினைபற்றிய அரசாங்கக் கொள்கையை இச்சுற்றறிக்கை வெளிப்படுத்தியது.

### மத்திய வங்கியில்

என்னுடையபுகார் என்னவென்றால் 700ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருக்கும் சில விதிகளை சில அரசாங்கத் திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் பின்பற்றவில்லையென்பதே. உதாரணமாக, உத்தியோக மொழியில் தேர்ச்சியடையாமலேயே, ஓர்பழைய அரசாங்க ஊழியர், தனது பதவி உயர்வு சம்பள உயர்வு போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு 700ம் இலக்க சுற்றறிக்கை வழி செய்கிறது.

ஆனால், மத்திய வங்கியிலே பதவி உயர்வு அளிக்கும் விஷயத்தில், அங்குள்ள ஊழியர்கள் குறிப்பிட்ட சில வருட காலத்துள் உத்தியோக மொழியில் தேர்ச்சியடைய வேண்டுமென்று கோரப்படுகிறது. இதில் தவறினால், பழைய ஊழியர்கள் கூட தண்டிக்கப் படுகிறார்கள். மத்திய வங்கியில் திறைசேரியின் 700ம் இலக்க சுற்றறிக்கை மீறப்படுகிறது,

700ம் இலக்க சுற்றறிக்கையின் படி அரசாங்க சேவையிலுள்ள பழைய ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள், வங்கி ஊழியர்களுக்கும கிடைக்க ஆவன செய்யும்படி நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### 55 வயது

55 வயது கடந்த அரசாங்க ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கும் போது அவர்களது உத்தியோக மொழியறிவு பற்றியும் ஆலோசனைக் கெடுக்கப்படும்என்று திறைசேரிச் சுற்றறிக்கை கூறினாலும் அந்தச் சட்டம், மிக மோசமான முறையில் அமுல் நடத்தப்படுகிறது. இதன் பயனாக மிக உபயோகமுள்ள, திறமை சாலியான ஊழியர்கள் அனேகர் 55 வயதில் கட்டாயமாக இளைப்பாறும் வண்ணம் நெருக்கப்படுகிறார்கள். இதனால் அரசாங்க ஊழியர் மத்தியில் வெறுப்பும், விரக்தியும் இன்று தலை தூக்கியுள்ளது.

எனவே நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்ளுவேன்—சிங்களத் தகுதிச் சோதனையில் சித்தியடையாவிட்டாலும் கூட திறமைசாலிகளான அரசாங்க ஊழியர்களை 55 வயதில் வீட்டுக்கு அனுப்பாமல் சேவை நீடிப்பு வழங்குவதற்கு வகை செய்யுங்கள்.

### புதிய ஊழியர்

இப்போது புதிய ஊழியர் பிரச்சினைக்கு வருகிறேன். புதிய ஊழியர்களின் தலைக்கு மேல் இன்று வாள் தொங்கிக் கொண்டிருக்கிறது.

நான் மிகுந்த பொறுப்புணர்வோடு கூறிக் கொள்வேன்.—1965 வரை எனது கட்சி தமிழ் அரசாங்க ஊழியர்களை அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுக்கும்படியும் உத்தியோக மொழியை படிக்க மறுக்கும்படியும் கேட்டுக் கொண்டது.

ஆனால் இந்த அரசாங்கம் 1965-ல் ஏற்பட்டு, தமிழ் பேசும் மக்களுக்கும், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டிருந்த சில அநீதிகளைத் துடைக்க அரசாங்கம் சம்மதமளித்தன்னர், புதிய ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டோம். அதன் பயனாகப் புதிய ஊழியர்களுக்கு உத்தியோகமொழியைப் பயிலுவதற்கு மேலும் 3 வருட அவகாசம் அளிக்கும் 701-ம் இலக்கச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

### வழி செய்க

இந்த ஆண்டு ஜுலையுடன் அந்த 3 வருட அவகாசம் முடிவடைந்து விட்டது. ஆனால் கடைசியாக நடைபெற்ற சிங்களத் தகுதிப் பரீட்சை இந்த ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் தான் நடைபெற்றது.

ஆகவே நான் நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்வேன்—701-ம் திறைசேரிச் சுற்றறிக்கையை செயற்படுத்தும்போது, ஜுலை மாதத்தில் சிங்களப் பரீட்சை நடாத்தப்படாததினால் ஆகஸ்ட் மாதச் சோதனையில் சித்தியடைபவர்களுக்கும் 701-ம் இலக்கச் சுற்றறிக்கையினால் கிடைக்கக் கூடிய சலுகைகள் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

### தரம் அதிகரிப்பு

எனது 2-வது ஆட்சேபம் எதுவென்றால்—சிங்களச் சோதனையின் தராதரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். கடந்த 3, 4, ஆண்டுகளாகச் சிங்களச் சோதனையின் தரம், எக்கச்சக்கமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

தேசிய அரசாங்கம், புதிய ஊழியர்கள் சித்தியடைய வேண்டிய சிங்களச்சோதனையின் 3-ம் தரத்தை சிரேட்ட தராதரத்திலிருந்து கனிஷ்ட தராதரத்துக்குக் குறைத்தது. ஆனால் நடைமுறையில் தரம் குறைக்கப்படவில்லை—எனவே இது குறித்து நிதியமைச்சர் நடவடிக்கையெடுக்கக்கோருகிறேன்.

### தமிழும் படிக்கவேண்டும்

இத்தகைய ஊழியர்களுக்கு தொல்லைதருவதும் தண்டனை வழங்குவதும், இந்த அரசாங்கத்தின் கொள்கை அல்லவென்று நம்புகிறேன். உண்மையில் ஐ. தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எல்லா அரசாஙக ஊழியர்களும் இருமொழிகளையும் பயிலவேண்டுமென கூறப்பட்டிருந்தது. துரதிருஷ்டவசமாக, ஆங்கில, சிங்கள மொழிமூலம் சேர்ந்தவர்கள் தமிழில் சிறிதளவாவது தேர்ச்சி பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.



சிங்களம் மட்டும் சட்டத்தையும் தமிழ்மொழி சட்டவிதிகளையும் முறையாக அமுல் நடத்துவதற்கு எல்லா அரசாங்க ஊழியர்களும் இருமொழிகளையும் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுவதில் தவறு ஏதுமிருக்கமுடியாது.

இந்தச்சபையிலே 1958ம் ஆண்டு காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி (விசேடவிதிகள்) சட்டத்தின்படி, தமிழ் மொழி மூலம் கல்விகற்ற ஒருவன், அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொண்டு தமிழிலே பதில் பெறும் உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. எனவே பொதுமக்களுடன் கடிதத்தொடர்பு கொள்ளும் அதிகாரிகள்; தமிழில் ஓரளவு அறிவுடையவர்களாக இருக்கவேண்டும். ஆகவே அரசாங்க ஊழியர் தமிழிலும் ஓரளவு தேச்ர்சி பெறுவதற்கு நடவடிக்கையெடுக்க இதுவே தருணமாகும்.

### தமிழ்த் தலைமை ஆசிரியர்கள்

தமிழாசிரியர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களித்த அரசாங்கம், தமிழ் ஆசிரியர் தலைமை ஆசிரியராகமாறும் போது சிங்கள தேர்ச்சி கோருவது அநீதியானது. வெள்ளைக்காரன் கூட இந்நாட்டை ஆண்டபோது இப்படிச் செய்ததில்லை! நாடு சுதந்திரம் பெற்றபின்னர் இன்று, தமிழ் தலைமை ஆசிரியர் சிங்களம் படிக்க வேண்டுமென்பது ஏகாதிபத்தியத்தைவிட மோசமானது.

இதே போல, சில கூட்டுத்தாபனங்களில் ஆங்கில மூலம் சேர்ந்த தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர்களை சிங்களத் தேர்ச்சி கோரி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதுவும் அநீதியான செயலாகும்.

### சில்லறை ஊழியர்களுக்கு சிங்களம் ஏன்?

அறிவிற் குறைந்த, படிப்புக்குறைந்த சில்லறை ஊழியர்களிடமும் சிங்களம் திணிக்கப்படுகிறது. இது அக்கிரமமானது. வெள்ளைக்காரன் காலத்தில்கூட, சில்லறை ஊழியர்கள் ஆங்கிலம் படிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதில்லை.

சொற்ப சம்பளமுடைய ஆயிரக்கணக்கான பியூன் போன்ற சில்லறை ஊழியர்கள் சிங்களம் படிக்காததால், சம்பள உயர்வு நிறுத்திவைக்கப்பட்டு தொல்லையடைகிறார்கள். சில்லறை ஊழியர்கள் மீதும் வேறு சில துறையினர் மீதும் சிங்களததை திணிப்பதை நிறுத்தும்படி நிதியமைச்சரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

வட கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராம சேவகர்கள் சிங்களத்தில் 2-ம் தரம் சித்தியடைய வேண்டுமென்று கேட்கப்படுகிறது. வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டபோது விதானைமாரிடம் ஆங்கிலம்படி என்று கட்டாயப்படுத்தவில்லை. இப்பொழுது மட்டும், வடகிழக்கு கிராம சேவகர்களிடம் எதற்காக சிங்களத்தை திணிக்கிறீர்கள்?

இத்தகைய பிரச்சினைகளையெல்லாம் நிதியமைச்சர் பரிசீலனை செய்யவேண்டும்: திறைச்சேரியின் 701-ம் இலக்க சுற்றுநிருபம் எல்லா திணைக்களங்களிலும் ஒரே மாதிரியாக அமுல் செய்யப்படவேண்டும். இப்போது அச்சுற்றறிக்கை ஒவ்வொரு திணைக்களத் தலைவரினாலும், நினைத்த நினைத்தபடி அமுல் செய்யப்படுகிறது. இதுபற்றி திட்டவட்டமான உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கவேண்டும்.

### காலஎல்லையை நீடிக்குக

எனவே, புதிய ஊழியர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படவேண்டுமென்று கேட்பதோடு, உத்தியோக மொழியில் போதுமான தேர்ச்சியையடைய இவர்களுக்கு வசதிகள் செய்துதரப்படவேண்டும்; சிங்களப் பரீட்சைத் தரம் குறைக்கப்பட்டு, சேவையை உறுதி செய்வதற்கு 2-வது தரத்தில் சித்தியடைவது போதுமானது என்ற கொள்கையையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

# அந்நியரை விட மோசமாக தேசிய ஆட்சிநடக்கலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது இரசிகர்கள் இலங்கையில் தான் அதிகம்

## "விரைவில் மீண்டும் அங்கு வருவேன்" கே. ஆர். விஜயா சொன்னர் இப்படி!



"நான் மீண்டும் விரைவில் இலங்கைக்கு வரவிருக்கிறேன். இலங்கையிலுள்ள எனது ரசிகர்களை சந்தித்து அளவளாவத் துடித்துக் கொண்டிருக்கிறேன். வெளிநாடுகளில் இலங்கையில்தான் எனது ரசிகர்கள் அதிகம் என்பது எனக்குத் தெரியும்'' இவ்வாறு திரைவாணனிடம் தெரிவிததார்; நடிகை கே. ஆர். விஜயா.

திருமணம் செய்து குழந்தை பெற்றெடுத்த பின்னர் மீண்டும் தாம் திரைப்பிரவேசம் செய்வதை முன்னிட்டு தியாகராஜ நகரிலுள்ள தமது புதிய மாளிகையில் பத்திரிகை நிருபர்களுக்கு அண்மையில் விஜயா சிற்றுண்டி விருந்தளித்தார். அப்பொழுதே இத்தகவலை திரைவாணனிடம் தெரிவித்தார்.

பிரபல நடிகரும், படாதிபருமான பி. எஸ். வீரப்பா புதிதாக வீரகுமார் மூவீஸ் என்ற கொடியின்கீழ் ஒரு புதுப்படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டபோது, அக்கதைக்கு இரண்டு கதாநாயகியர் தேவையாக இருந்தது. ஜய்சங்கர் ஒரு கதாநாயகர். அவரும் சரி, டைரக்டர் எஸ். ராமநாதனும் சரி' ஜய்சங்கருக்கு ஏற்ற ஜோடியும், அந்தக் கதாபாத்திரத்திற் கேற்றவருாக அமையக்கூடியவர் கே. ஆர். விஜயாதான், அவரைக் கேட்டுப் பார்க்கலாமே என்ருர்களாம்.

பி. எஸ். வீரப்பா விஜயாவைக் கேட்டதும், அவர் மனப்பூர்வமாகச் சம்மதம் அளித்தாராம். உடனே ஒப்பந்தமாகி, விஜயாவின் புனர் சினிமா பிரவேசம் உறுதியாகி, படப்பிடிப்பும் வெங்கடேஸ்வரா ஸ்டுடியோவில் ஆரம்பமாகிவிட்டது.

தமது சினிமா 'புனர் பிரவேசத்தைக் கொண்டாட, கே. ஆர். விஜயா உடனே பத்திரிகைக்காரர் களுக்கு அவசர அழைப்பு அனுப்பி, தமது புதிய தியாகராய நகர் மாளிகையில் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்தார்.

படிகள் மயமான நூதன மாளிகை அது. எங்கு பார்த்தாலும் மேலே' செல்ல அமைக்கும் படிகள்தான். வீட்டிற்குள் நுழைவதற்கே ஏழெட்டுப் படிகள் ஏற வேண்டும். சுமார் இருபதடி உயரத்திற்கு ஜன்னல்கள், உள்ளெங்கும் இயற்கைக் காற்று வீசுவதற்கான ஜன்னல் அமைப்புகள். இந்த மாளிகையின் விசேஷம் எல்லாம் விசாலமான ஹால்கள், அறைகள், அமெரிக்க பாணியில் கீழே கார்நிறுத்த இடம்; அதற்குமேல் வாச அறை!

விருந்திற்கு வந்தோரை திரு. வேலாயுதமும், கே. ஆர். விஜயாவும் அன்போடு வரவேற்றனர்.

விருந்திற்குப் பின், விஜயா சார்பில் மூவிலாண்ட் ஆசிரியர் வாசு, இந்த விருந்தின் நோக்கத்தைக் கூறினுர். இப்புதிய படத்தில், அதாவது கே. ஆர். விஜயா மீண்டும் நடிக்க முன் வந்திருக்கும் முதற்படத்தில் ஜெய்சங்கர், விஜயா, வாணிஸ்ரீ, நாகேஷ், மனேரமா எல்லாம் இருப்பார்கள். ஒரு புதிய வாலிபர் அறிமுகப் படுத்தப்படுவாராம்.

விஜயா கிள்ளைபோல் சில வார்த்தைகளை மொழிந்தார்.

''ஏற்கெனவே நீங்கள் ஆதரவு தந்து எனக்குப் புகழேற்படச் செய்ததுபோல இனியும் ஆதரவு தரவேண்டும்' என்ருர் விஜயா.

வந்திருந்த பத்திரிகாசிரியர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், விஜயாவே பேனக்களை அனபளிப்பாகத் தந்தார்.

தமது குழந்தையைப் பராமரிக்க உள்ள தாதியோடு, விஜயா ஆங்கிலத்தில் அமர்க்களமாகப் பேசினுர்.

# எம். ஜி. ஆருக்கு பிடிக்காத விஷயம்!



'எனக்குப் பிடிக்கவில்லை' என்ருர்எம். ஜி. ஆர். சற்றுப் பலத்த குரலில்.

சற்று ஒதுங்கி உட்கார்ந்திருந்த எனக்கு, அவருக்குப் பிடிக்காதது என்ன என்பதை அறிவதில் ஆர்வம் ஏற்பட்டது. அவருக்கு எதிரே ஒரு பிரபல படாதிபரும், அவரது அந்தரங்க ஆலோசகரும் அமர்ந்திருந்தார்கள்.

என் மனதில் தோன்றியதை என் முகத்தால் அறிந்த எம். ஜி. ஆர். —

'ஆமாங்க இந்தப் பாட்டெழுதுபவர்கள், இசை நிபுணர்கள் இவர்கள் செய்யும் காரியங்கள் எனக்குப் பிடிப்பதில்லை. உழைப்பு என்பதே இவர்களிடம் அபூர்வச் சரக்கு ஆகிவிட்டது. 'ஏமாற்ருதே, ஏமாருதே என்ற பல்லவி வரும்படி, கருத்தையும் கூறி, பாட்டு எழுதச் சொன்னேன். பாட்டைத் தொகுப்பவர் ஏதோ போட்டுக் கொண்டு வந்தார். இசை டைரக்டரோ ஆங்கிலத்திலே பதங்களைப் போடச் சொன்ஞர். தமிழ்ப் படத்திலே எதற்கய்யா ஆங்கில டோண்ட் கேர் பதங்கள் என்றேன். கேட்கவில்லை.

'இசை அமைப்பாளர்களும் உடம்பை வளைத்து வேலை செய்வதில்லை. ஒன்றும் தோன்ருவிட்டால், செக் செக் செக்கே! ஹாஹாஹா! ஹெ ஹெ ஹெனு என்று சப்தம்போடச் செய்கிருர்கள். எனக்கு இதெல்லாம் பிடிப்பதில்லை.

'பாட்டு என்பது என்ன! பத்து வரிகளில் எழுதக் கூடிய கருத்தை ஒரே வரியால் பொருத்தமான பதங்களைக் கொண்டு வெளியிடுவதுதான். அதற்கு மாருக வசனம் மாதிரி 4 வரிகள் பாட்டுப் போட்டால் எப்படி?

'இன்னொரு கவிஞரிடம், ஒரு கருத்தைக் கொடுத்து, ஒரு பல்லவி எழுதிவரச் சொன்னேன். அவர் எழுபது பக்கங்கள் எழுதிக் கொணர்ந்தார். எதைப் பொறுக்குவது என்பது தெரியவில்லை. அதுவல்லவா உழைப்பு' என்ருர்.

இப்பேச்சுக்கள் ஜெமினி ஸ்டூடியோவில் ஒளி விளக்கு படப் பிடிப்பு நடைபெற்றபோது—இடைவேளை நேரத்தில் எம். ஜி. ஆர். ஓய்வாக இருந்தபோது நடைபெற்றது.

எம். ஜி. ஆரின் 100-வது படமான ஒளிவிளக்கு இம் மாதம் 15-ந் திகதி திரைக்கு வருகிறது.

# ரசிகர்களுடன் உட்கார்ந்து படம் பார்ப்பதற்கு ஜெயா போட்டுள்ள திட்டம்!



நடிகை ஜெயலலிதா தான் நடித்த 'புதிய பூமி' படத்தைப் பார்க்காததால் படம் வெளியான பின் சென்னை குளோப் தியேட்டரில் படம் பார்க்க இரவு காட்சிக்குப் போனுர். எப்படியோ ரசிகப் பெருமக்கள் தெரிந்து கொண்டு ஜெயலலிதாவை சூழ்ந்து கொண்டார்கள்.

பின் போலீஸ்காரர்கள் மூலம் விடுவிக்கப்பட்டு படம் பார்க்க தியேட்டருக்குள் சென்ருர்

தியேட்டர் மானேஜர் அறையினுள் சிறிது நேரம் ஜெயலலிதா உட்கார்ந்து விட்டு படம் ஆரம்பமாகும் போது படம் பார்க்க சென்ருர்.

படம் பார்த்து விட்டு ஜெயலலிதா காரில் வரும் பொழுது அவருக்கு ஒரு யோசனை வந்தது.

அதாவது ரசிகர்களுடன் சேர்ந்து படத்தைப் பார்க்க வேண்டும் என்ற பெரும் ஆசை. அதற்குத்தான் ஒரு யோசனை. அதாவது அவர் 'புதிய பூமி' படம் பார்க்கும் பொழுது அவருக்கு முன்னால் உட்கார்ந்திருந்த முஸ்லிம் பெண்கள் கருப்பு துணியால் முகத்தை மறைத்துப் போட்டுக் கொண்டு வந்திருந்தார்கள்.

ஜெயலலிதாவும் தன் தாயார் சந்தியா விடம் சொல்லி அதே போல் கருப்பு அங்கி ஒன்றைத் தைத்து கொடுக்க [illegible] அதை அணிந்து கொண்டு படம் பார்க்க வருவது என்று தன் கருத்தை சொல்லிக் கொண்டு வந்தார்.

இனிமேல் படம் பார்க்க ஜெயலலிதா வரும்பொழுது [illegible] வருவாரா என்பது பொறுத்திருந்து தான் [illegible] வேண்டும்.

## வட்டமேசை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ழ்த் தலைவர்கள்கூட மூர்த்தண்யமாக எதிர்த்ததை உங்களால் மறுக்கமுடியுமா?

இப்போதைய இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தையோ இந்தியப் பிரதமரும், இந்திய அரசாங்கமும், இங்குள்ள மலைநாட்டுத் தமிழர் ஸ்தாபனங்களும் அவற்றின் தலைவர்களும் ஏற்றுள்ளனரே!

எனவேதான் தமிழரசுக் கட்சியும் இதை ஆதரிக்கிறது—கட்டாய நாடுகடத்தலில்லை என்ற அறிவிப்பின்! நீங்களும் உங்கள் கட்சியும் கூட அதை ஆதரித்து வோட் அளித்தீர்கள்!

எனவே தயவுசெய்து முழுப் பொய்களை இனிமேலும் கூருதீர்கள்! முழுப் பூசினிக்காயை ஒரு பிடி சோற்றுள் மறைக்க முயலாதீர்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

# திரைவாணன் பதில்கள்

கே. இரகுநாதன்,
வெள்ளவத்தை.

கே; ஜெயலலிதாவின்விஷயத்தில் சந்தியா எம். ஜி. ஆருடன் மோதிக் கொண்டாராமே உண்மையா?

ப: நீங்கள் ஜெயலலிதாவின் எந்த விஷயத்தைப் பற்றிக் கூறுகிறீர்கள்?

ஃ

க. சிவலோகநாதன்,
பாண்டிருப்பு.

கே: எம். ஜி. ஆர். ரசிகர்கள், சிவாஜி ரசிகர்கள் ஆளுக்காள் மோதுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அப்படிப்பட்டவர்கள் ஆட்டத்தை ரசிக்கவில்லை ஆளைத்தான் ரசிக்கிருர்கள்!

கே; உணர்ச்சியுடன் நடிப்பதில் சிவாஜிக்குப் பின் யார் உண்டு?

ப: யார் உண்டு......?

ஃ

எஸ். கணேஷ்,
நாயன்மார்கட்டு.

கே: எம். ஜி. ஆர். ஜெயலலிதா பிரிந்து விடுவார்கள் என்று ஒரு தினசரிப் பத்திரிகை கூறுகிறது. அவர்கள் பல படங்களில நடிப்பதற்கு புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளார்களே எப்படி இது உண்மையாகும்?

ப: உங்களுக்குத் தெரிந்தது கூட அந்தப் பத்திரிகையாளருக்குத் தெரியவில்லையே! ஜெயலலிதா எம். ஜி. ஆர். உறவில் இப்போது இன்னும் நெருக்கம் ஏற்பட்டுள்ளது.

ஃ

திலகராாசர்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழகத்தில் வெளியான சிவாஜி நடித்த படங்களான கலாட்டா கல்யாணம், என் தம்பி ஆகிய படங்கள் எத்தனை நாளாக ஓடுகின்றன? கலாட்டா கல்யாணம் வெற்றிப் படமா?

ப; என் தம்பி 75 நாளையும், கலாட்டா கல்யாணம் 100 நாளையும் தாண்டி ஓடி முடிந்து விட்டன. கலாட்டா கல்யாணம் வெற்றிப் படமே!

ஃ

த. குகேந்திரன்,
கோண்டாவில.

கே: 'சதி லீலாவதி'யை அடுத்து எம். ஜி. ஆர். நடித்த படம் எது?

ப; 'இரு சகோதரிகள்'.


திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 11 83.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சியளிக்கிறது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (அட்டன்) கல்யாணி (நாவலபிட்டி) மொடேன் (பண்டாரவளை)

● எம். ஜி. ஆர்., ● சரோஜாதேவி ● நம்பியார் ● நாகேஷ் ● மனோரமா —நடிக்கும்—



## நான் ஆணையிட்டால்

**2-வது வெற்றிவாரம்** சபயர் (கொழும்பு) மைலன் (வெள்ளவத்தை)
தாஜ்மகால் (கல்முனை) அயன் (மன்னார்) விஜிதா (மஸ்கேலியா)

★ ஜெய்சங்கர் ★ கே. ஆர். விஜயா —நடிக்கும்—

## பொன்னான வாழ்வு

**7-வது வாரம்** கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)
விஜிதா (அட்டன்)

## நான்

# நாடு புகழும் 3-வது வெற்றி வாரம்!

**செல்லமகால்** (கொழும்பு)

ரவிச்சந்திரன், ஜெயலலிதா, நாகேஷ், பாலாஜி, உதயசந்திரிகா,
பி. கே. சரஸ்வதி, ஜெயஸ்ரீ, சண்முகசுந்தரி, சுந்தரராஜன்
—நடிக்கும்—

# மாடி வீட்டு மாப்பிள்ளை

## எதிர்பாருங்கள்!


● சிவாஜிகணேசன், ● பத்மினி, ● கே. ஆர். விஜயா, ● நாகேஷ், அசோகன், —நடிக்கும்—

## இரு மலர்கள்

# வெற்றி முழக்கமிடும் 80-வது தினம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) சென்ட்ரல் (பருத்தித்துறை) ராதா (கந்தப்பொல) றோயல் (வவுனியா) சாரதா (அக்கரைப்பற்று) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) சிகிரி (பண்டாரவளை)

ஆகிய திரைகளில்



★ ஜெமினிகணேசன் ★ டி. கே. பகவதி ★ பி. சரோஜாதேவி
★ எல். வரலட்சுமி ★ நாகேஷ் ★ விஜயநிர்மலா — நடித்த —

கே. எஸ். கோபால கிருஷ்ணனின்

## பணமா? பாசமா?

**எமது அடுத்த வெளியீடு**

ஜெமினி, சரோஜாதேவி, விஜயகுமாரி, அசோகன்,
தங்கவேலு, சோ, கருணாநிதி —நடித்த—

ஏ. எல். எஸ் புரொடக்ஷன்

## பெண் என்றால் பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கவீதி 194 ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் செப்டம்பர்மாதம் 14-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.